உ

திருச்சிற்றம்பலம்

அகத்தியர் குறுந்திரட்டு

உரையாசிரியர்

தமிழ்ப்பண்டிதரும் மருத்துவாசிரியருமான

திரு. மா. வடிவேலு முதலியாரவர்கள்

மயிலை. க. மாணிக்கவேல் முதலியார்

வெளியிடப் பெற்றது.

திவு செய்தது] 1930 [விலை அணா 8.

Printed by
The Progressive Printers,
17, Coral Merchant St., Madras.

இந்நூலுள் வரும் மருந்து முறைகளின் அட்டவணை

அதிமதுராதிப் பொடி 10
அதிமதுர குளிதைலம் 24
இரண நோய்கள் 28
இரணங்களுக்கு நீரெட்டிவிரை குடி தயிலமும் பூசு தயிலமும் 29
இரத்த நோய் 39
இரத்த நோய்க்குத் தண்ணீர் விட்டான் நெய் 40
எல்லா மருந்துக்கும் விஞ்சை மூலம் 53
ஐயம் இருபதுக்கும் இஞ்சி நெய் 14
ஐயம் இருபதுக்கும் இருவேலிக் குளிதைலம் 15
ஐந்துப்புகளாவன 35
ஐந்து சாரங்களாவன 36
ஐவகை வலிகட்கு நசியம் 44
கழுத்தின்மேல் நோய் 30
கழுத்தின்மேல்நோய்களுக்குப் பெருமருந்துப் பொடி 31
கழுத்தின்மேல்நோய்களுக்குக் குளிதயிலம் 32
கவிசை 34
கரப்பான் நோய் 46
கண்டமாலை வகை 49
கண்டமாலை வகைக்குப் பூச்சு 50
கண்டமாலை வகைகளுக்கு தடவும் தயிலம் 51
கண்ணோய் வகைகள் ,,
கண்ணோய்க்கு முத்தாதி மாத்திரை 52
கண்ணோய்களுக்கு முழுகெண்ணெய் 53
காமாலை 26
கிராணி பேரும் மருந்தும் 18
கிராணிகளுக்கு உடும்பாதிப் பொடி 19
குளிதயிலம் 11
குன்மப் பேரும் மருந்தும் 19
குன்மங்களுக்கு நாபியாதிப் பொடி 20
குருமருந்தின் பெருமை 56
சந்திகளுக்கு நசியம் 42
சாம்பிராணித் தயிலம் 30
ஜாதிலிங்கக்கட்டு செய்யும் வழி 59
சிலேத்துமம் இருபதிற் சிலவற்றின் பேரும் மருந்தும் 12
சுரக்குடிநீர் 41
சுரசந்நி மாத்திரை 43
செங்கத்தாரி நெய் 47
நீரிழிவுபேரும்மருந்தும் 21
தாளிசபத்திரிப்பொடி 58
நீரிழிவிற்கு ஆவாரையாதிக்குடிநீர் 23
நோய் நட்சத்திரத்தால் நோயாளி நன்மை தீமை யறிதல் 57
பித்தம் நாற்பதிற் சிலவற்றின் பேரும் மருந்தும் 9
பேய்த்துமட்டிக்காய் எண்ணெய் 35
முக்கடு சிட்டப் பொடி 27
மூலம் ஒன்பதுக்கும் பேரும் மருந்தும் 16
மூலங்களுக்குக் கன்னிச் சருகுப் பொடி 17
மேற்பூசுந் தயிலம் 45
மேகம் இருபதுக்கும் பறங்கிப்பட்டை ரசாயனம் 25
ருத்துநோய் 37
ருத்நோய்க்குச் சீரகரசாயனம் 38
வாதம் எண்பதிற் சிலவற்றின் பேரும் மருந்தும் 2
வாதத்திற்கு மருந்து 54
விடாரிக் குடிநீர் 48

வைத்தியத்திரட்டு 0 12 0

இது பல வருடங்களுக்குமுன் பிரசித்திபெற்ற ஸ்ரீகாசி விஸ்வநாத முதலியாரவர்களால் இயற்றப்பட்டது. ஸ்ரீ முதலியாரவர்கள் ஆங்கில, ஆயுர்வேதக் கலைகளில் மிகத் தேர்ந்த புலமையுடையவரென்பது தேற்றம். தம்முடைய சொந்த அநுபவத்தில் கைகண்ட வைத்திய முறைகளையே இந்நூலில் மிகத் தெளிவான வகையில் எழுதியிருக்கின்றார். வைத்தியர்கள் இந்நூலைக்கொண்டு சிகிச்சை செய்வார்களானால் மிக விரைவில் பிரசித்தியடைவார்கள். வைத்தியர்கள் அல்லாத குடும்பஸ்தர்கள் இந்நூலைக் கையாளுவார்களானால் தக்க வைத்தியர்கள் கிடைக்க முடியாத காலத்திலும் அவசரமரன சமயங்களிலும் தாமே அச்சமின்றிச் சிகிச்சை புரியலாம்.

அகத்தியர் வைத்தியம் (பின் எண்பது) 0 12 0

வைத்தியர்களுச்கு இன்றியமையாத முப்பூ முதலிய உயர்ந்த முறைகளும் அடங்கி யிருக்கின்றன. இதிலுள்ள பாடல்கள் சொல்லழகும் பொருளழகும் இனிமையாக அமைந்தவை. செய்யுட்கள் பல எட்டுக் சுவடிகள் கொண்டு செப்பமாகத் திருத்தஞ் செய்யப்பட்டும் பல வைத்திய நூல்களுக்கு உரையாசிரியரும் சிறந்த வைத்தியருமான திருவாளர். மா. வடிவேலு முதலியார் அவர்களால் கைபாகம் செய்பாகம் நன்கு விளங்கும்படி பதவுரை கருத்துரை, விசேடவுரை முதலியன மிகத் தெளிவாக எழுதப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்கவேண்டிய நூல்.

ஸத்வைத்ய ஜீவனம் 0 8 0

இது நூதனமாய்க் கற்பிக்கப்பட்டதல்ல! பல நூற்களினின்றும் கைப்புரட்டு செய்ததுமல்ல!! உதவாத ஆபாசப்பொய்யான முறைகளடங்கியதுமல்ல!!! அநேக நூற்றுண்டுகளுக்கு முன் "லோலம்ப ராஜா" என்னும் மகரிஷியால் வடமொழியில் (ஸமஸ்கிருதம்) இயற்றப்பட்டது. வடமொழி நூல்களில் சரகம், சுஸ்ருதம், வாக்படம், பசவராஜியம், சிந்தாமணி முதலிய வைத்திய சாஸ்திரங்களே தலைமையாய் விளங்குவன. அவையெல்லாம் மிக விரிவாயிருத்தலினல் அவற்றின் முக்கியமான அருமையான முறைகளை மாத்திரம் ஒருசேரத் திரட்டியதாகும். இதில் சகலவித நோய்களின் நாடியும், குணமும் மிகச் சுலபமாய்த் தெரிந்துகொள்ளும் வழியும் ஒவ்வொரு நோய்களுக்கும் பலவிதமான சிகிச்சைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன.

S 177

முகவுரை

இந்நூல் குறுந்திரட்டு என்பது. இதனை இயற்றியவர் அகத்தியர் என்ப. இஃது ஐம்பத்தாறு அறுசீர் விருத்தங்களும், மூன்று எண்சீர் விருத்தங்களும், ஐந்து கலி விருத்தங்களுமாக அறுபத்து நான்கு செய்யுட்களை யுடையது. இதில் இது,

"நூலெனப் படுவது நவலுங் காலை
முதலும் முடிவும் மாறுகோ ளின்றித்
தொகையினும் வகையினும் பொருண்மை காட்டி
உண்ணின் றகன்ற உரையொடு பொருந்தி
நுண்ணிதின் விளக்கல் அதுவதன் பண்பே"

எனத் தொல்காப்பியத்திற் கூறியபடியே தொகுத்துச் செய்யப்பட்டது.

இதில் நோய்களின் பேர்களும், அவை ஒவ்வொன்றிற்கும் மேல் மருந்து, உள்மருந்துகளுமான பிரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. இவை யனைத்தும் ஐயந்திரிவின்றி மருத்துவர்கள் ஒவ்வொருவரும் கையாடக் கூடியனவே.

இந்நூல் பலவகையாகத் தவறுதலடைந் திருந்தமையின் அவற்றை, ஒருவாறு என் சிற்றறிவிற் கெட்டிய வரையில் திருத்தி அதற்குத்தக்க பொழிப்புரை ஒன்று எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கிறது.

இதை மருத்துவர்கள் கற்றால் பலவழிகளிலும் நன்மை படைவார்களென்று நானே சொல்வது மிகை. இந் நூலை வாங்கிப் படித்துப் பார்த்தால் அது நன்றாய்த் தெரியும்.

இது உயர்ந்த பளபளப்புள்ள தாளில் சுத்தமாய் அச்சிடப் பட்டிருக்கிறது.

இது போலவே மற்றைய் மருந்து நூல்களையும் அச்சிடுமாறு இறைவன் அருள் செய்வானென்று அவனுடைய திருவருளைச் சிந்திக்கின்றேன்.

மா. வடிவேலு முதலியார்,
தமிழ்ப்புலவர்,
சித்த, ஆயுள்வேத வயித்தியர்.

அகத்தியர் குறுந்திரட்டு

அறுசீர்விருத்தம்

ஆதியாங் கணேசன் காப்பாம்
அறுநூற்றுக் கருவை யெல்லாம்
சோதியாம் ஆயி பாதம்
துணையென வுட்கொண் டேத்தி
நீதியாங் திரட்டு சூத்திரம்
நிலைமருத் துவமாய்ச் சொல்ல
வாதமாம் பிணிகள் தீர்க்கு
மருந்தொடு குணமுங் கேளே.

(க - ரை) இவ்விருத்தம் மூத்த பிள்ளையார் வணக்கத்தையும் நூல் வந்த வழியையும் சொல்லு கின்றது.

(போ - ரை) அறிவொளியை யுடையவளாகிய (என்) தாயின் திருவடிகளைத் துணையாவன வென்று உள்ளத்தில் எண்ணிப் போற்றி, மருத்துவ அறுநூறு என்னும் நூலின் உட்பொருளை யெல்லாம், ஒரு வரம் பாகிய குறுந்திரட்டுச் சூத்திரம் என்னும் பேரால் அழியாத மருத்துவமாய்ச் சொல்வதற்கு முதன்மை யானவனான மூத்த பிள்ளையார் காவலாவர். இனி, வாதம் என்னும் வளியாலுண்டாகும் நோய்களின் குணங்களையும் அந்நோய்களைத் தீர்க்கும் மருந்துகளை யும் சொல்லக் கேட்பாய்.

இதனால் 'குறுந்திரட்டுச் சூத்திரம்' என்பது 'மருத்துவம் அறுநூறு' என்பதின் சுருக்கமாகத் தெரிகிறது. ஆனால் அவ்'வறு நூறு' இப்போது வழங்கி வருகிற 'பாண்டவைப்பு அறுநூறு' 'வல்லாதி அறுநூறு' 'ஜனக சிந்தாமணி அறுநூறு' என்பன முதலிய அறுநூறுகளாகத் தோன்றவில்லை. ஆதலின் அந்த அறுநூறு எதுவென்று உணர்தற்கில்லை.

'குணமொடு மருந்து' என்ன வேண்டியது மோனை நோக்கி 'மருந்தொடு குணம்' என நின்றது. க.

வாதம் எண்பதிற் சிலவற்றின் பேரும், மருந்தும்

வாதந்தா னெண்ப தாகும் வருகின்ற பக்க வாதம்
சீதமெய் நடுக்கு வாதம் சிறந்திடு முடக்கு வாதம்
சூதமெய்ச் சந்து வாதம் தோன்றிடு முகத்தின் வாதம்
பேதமாம் வாதந் தீரப் பெருத்திடு மருந்து கேளே.

(க - ரை) இவ்விருத்தம் வளிப்பிணிகளுக்கு மருந்து சொல்வதாகக் கூறுகின்றது.

(பொ - ரை) வளிப்பிணியானது எண்பது வகைப்படும். வருகின்ற பக்கவாதமும், குளிர்ச்சியோடு உடலை நடுக்கும் நடுக்குவாதமும், உயர்ந்த முடக்கு வாதமும், வஞ்சத்தை யுடைய உடலிலுள்ள பூட்டுச் சந்துகளில் வரும் சந்துவாதமும், (வெள்ளிடை மலைபோல் எவர்க்கும்) தெரிகின்ற முகவாதமும், முதலாகச் சொல்லப்பட்ட பலவகையான வாதநோய் களும் தீர்வதற்கு உயர்ந்த மருந்து கேட்பாயாக.

வளி நோயானது எண்பதென்று சில நூற்றலைவர்களும் எண்பத்து நான்கென்று சில நூற்றலைவர்களும் கூறுகின்றனர். அவற்றை எல்லாம் இங்கு எழுதின் மிகப் பெருகும். ஆதலின் அவற்றை முடிந்த நூலிற்கண்டு கொள்க. பக்கவாதத்தையே பக்ஷகாதவாதம் (பாரிசவாதம்) என்று ஜீவரக்ஷாமிர்தம் என்னும் நூல் சொல்லுகின்றது. ஆயின், யூகிமுனிவர் சிந்தாமணி 800-என்னும் நூல் பக்கவாதம் வேறு பக்ஷவாதம் வேறெனச் சொல்லுகின்றது. அவற்றை:

"உண்மையா யுடம்பெல்லாம் வாயு வாகி
　　உயர்கின்ற நாடியஃ தசைவு மின்றிக்
கண்மையாய்க் காயமீ தினிலே யேறிக்
　　கசங்கியே யிழிந்துமே வலித்துக் காணும்
பண்மையாய்ப் பக்கத்தி லிசிவ துண்டாய்ப்
　　பாரித்துப் பணைக்கையுங் காலுங் கோணும்
வெண்மையா யுடம்பெங்கும் வியர்வை காணும்
　　மெலிவு பக்க வாதத்தின் விவரந்தானே."

எனவும்;

"தானகக் கால்கோணிச் செத்தாற் போலத்
　　தாவாமற் றரைதன்னி னடக்கொண் ணாது
கானகக் கைகளொன்றும் பிடிக்கொட் டாது
　　கனமாகி யுணர்ச்சியின்றிக் கைகள் சோரும்
மானக மயிர்க்கூச்சுந் திமிர்ப்பு முண்டாம்
　　வாய்தானுங் கோணியே தண்ணீர் வீழும்
பேணகம் பித்தம்போ லழன்று காணும்
　　பிரிவுபட்ச வாதத்தின் பெற்றி யாமே."

எனவும் யூகிமுனிவர் 800-ற்றில் முறையே பக்க

வாதத்திற்கும், பட்ச வாதத்திற்கும் கூறப்பட்டிருக்குஞ் செய்யுள்களாலறிக.

இவ்வெண்பது வாத நோய்களையும் தமிழ் முறையாகக் கூறப்பட்ட பண்டைய நூல்களிலுள்ள;

"உள்ளடி கனத்தல் புறவடி தடித்தல்"

என்னும் முதற்குறிப்பகவலாலுமறிக.

இவற்றில் 'உள்ளடி கனத்தலை' 'பாதலகவாதம்' என்றும், 'புறவடி தடித்தலை' 'பாதாக்ஷேபக வாதம்' என்றும் வடநூல் கூறுகின்றது.

அன்றிப், பக்கவாதமே பக்ஷவாதமாயின்,

"சக்கொன்று முக்கா வேலையிரண்டு
சுகமாய்க் காய்ச்சிக் குடித்திடவே
பக்கவாயு வாதகுன்ம மெல்லாம்
பறக்கு மென்றே யடியுங்கடி"

என்னும் குடி நீராலும்,

"கண்ணினடு வேருங் கரியமா வின்தொடையும்
நண்ணு மலையாளி நாகரமும்—எண்ணியே
திக்குக் குடிநீர்செய் தேன்விட் டருந்திவிடு
பக்கவா தச்சுரம் போம் பார்"

என்னும் குடிநீராலும் அப்பக்ஷவாதம் போகவேண்டி வரும். அங்ஙனம் போகாதாகையால் அவை வெவ்வேறென்றே அறிவர் மருத்து நூலறிஞர். உ.

சித்திரமூலாதிப்பொடி

மருந்துதான் சித்திர மூலம்
வளருமா விலிங்கு கொன்றை

திருந்திய முருங்கை சங்கு
சிறந்தவெள் ளறுகு வேம்பு
பொருந்திய வெருக்கு சுக்கு
புகழுந்திப் பிலிம ரீசம்
கருந்திறல் லவண மஞ்சுங்
கால்மண்ட லந்தான் கொள்ளே.

(க - ரை) இவ்விருத்தம் வாதம் எண்பதுந் தீரச் சித்திர மூலாதிப்பொடி செய்யும் வகையைக் கூறுகின்றது.

(போ - ரை) சித்திர மூலவேர்ப்பட்டை, நன்ருய் முதிர்ந்த மாவிலிங்கப்பட்டை, கொன்றைப் பட்டை, நல்முருங்கைப்பட்டை, சங்கம்பட்டை, உயர்ந்த வெள்ளறுகு, வேப்பம்பட்டை, எருக்கம் பட்டை, சுக்கு, திப்பிலி, மிளகு, இந்துப்பு, வளையலுப்பு, சோற்றுப்பு, கல்லுப்பு, சுரியுப்பு ஆகிய ஐந்துப்புகள், ஆகிய பதினறு சரக்குகளையும் ஒரே எடையாக நிறுத்தெடுத்து வறுக்க வேண்டியவைகளை வறுத்து இடித்துத் துணியில் வடிகட்டி நோய்வன்மைக்கும், உடல் வன்மைக்கும் தக்க அளவு கால் மண்டலம் என்னும் பத்துநாள் சாப்பிட்டால் முன் சொன்னவாத நோய்கள் தீர்ந்து விடும்.

மருந்தளவு, பத்தியம் முதலியவைகளை வழக்கத்திலுணர்ந்து கொள்க.

இவ்வாத நோய்க்குத் தமிழ் வாதராக்ஷசம், வீரமெழுகு பஞ்சசூதமெழுகு, வானமெழுகு, இரசப் படங்கு, இரசபற்பம் முதலியவைகளைத் தலையாய மருந்துகளாகக் கொள்க.

௩.

தொக்கடத்தயிலம்

கொள்ளவே யெண்ணெ யஞ்சும்
குலவுதில் லைப்பால் கற்கம்
விள்ளவே முருங்கை வாகை
மிகுத்தமா விலிங்கு மூலம்
கள்ளவிழ் காய மிந்து
கடிய வெள்ளுளி*வசம்பு
உள்ளமா யெரித்துப் பின்ன
ருடலிற்றொக் கடமுஞ் செய்யே.

(க - ரை) இவ்விருத்தம் முன்சொன்ன வாத நோய்களுக்குப் பூசிப் பிடிக்குந் தொக்கடத்தயிலஞ் செய்யும் வழி கூறுகின்றது.

(போ - ரை) புன்கெண்ணெய், வேப்பெண்ணெய், எள்ளெண்ணெய், இலுப்பை எண்ணெய், ஆமணக்கெண்ணெய் ஆகிய ஐந்து எண்ணெய்களையும் ஒரு அளவாக நிறுத்தெடுத்து ஒரு மண்சட்டியில் ஊற்றி, அதில் தில்லைப்பால் ஒரு அளவு கலந்து அதில் முருங்கைப்பட்டை, காட்டுவாகைப்பட்டை, மாவிலிங்கப்பட்டை, பெருங்காயம், இந்துப்பு, வெள்ளைப் பூண்டு, வசம்பு இவ்வேழு சரக்குகளையும் தூளிடித்து மேற்படி ஐந்தெண்ணெயிற் போட்டுக் காய்ச்சிப் பக்குவமான பின் வடித்து வைத்துக்கொண்டு, பின்னர் வாத நோய் கொண்டவர்களுடைய உடம்பிற் பூசித் தொக்கடஞ்செய்ய வேண்டும்.

ஐந்தெண்ணெய் இவை தாம் என்றதை;

(பா - ம்) * திப்பிலி.

"விழலாச்சு சந்நிக்கஞ் செண்ணெய்த் தயிலம்
விளம்பக்கேள் புன்கெண்ணெய் வேம்பினெண்ணெய்
அழலாகு மெள்ளெண்ணெ யிலுப்பை யெண்ணெ
யாமணக்கி னெண்ணெயிவை யஞ்சு மாகும்
தழலாக வொன்றாக்கி மருந்தைச் சேர்க்கச்
சாற்றக்கேள் ரசங்கந்தி தாளகமுஞ் சிலையும்
உழலாத லிங்கமிவை வகைக்கிரு கழஞ்சா
யொக்கவே பழங்காடி யூட்டி யாட்டே.

ஆட்டியே பழஞ்சீலை தன்னி லூட்டி
அதற்கிசைந்த குறுங்கோற்றிரி பந்தமாக்கி
நீட்டியே யெண்ணெய் குத்தித் தீக்கொளுத்தி
நினைவோடே யெண்ணெய்களை வார்க்கும் போது
வீட்டிமையில் லாதந்த மருந்துடனே தயிலம்
விடவிடவே மூன்றுதரம் விட்டி றங்கும்
ஈட்டிவைத்த தயிலமிது கைகாலிற் காசி
னடை தேய்க்கச் சந்நிகளுஞ்சீதம் போமே.

சீதமொடு சந்நிபதின் மூன்று வாதம்
திகையாத வுளைச்சலொடு திமிரல் வாங்கும்
பேதமில்லை முகசந்நி சயித்தியங்கள் தீரும்
பிணியுள்ளோர்க் கிதுநன்று பேணி வைக்கும்
நீதமுள்ள சஞ்சீவி நோய்க்கு மார்பாணி
நீங்காத பிணிநீங்கு நித்திய சுகங்காணும்.

என்றதால் அஞ்செண்ணெயின் வகையையும், அவற்றால் ஆனமற்றோர் அஞ்செண்ணெய்த் தொக்கடத் தயிலத்தையுங் காண்க.

இது ஒருவகையி லடங்குவதன்று.

ஐந்தெண்ணெய் வாதத்தையும், சந்நியையும் போக்கு மென்றதை;

"அஞ்செண்ணெய் வாத சந்நியைப் போக்கும்"

என்றதாலறிக.

வாயுவுடம்பினர் மர்த்தனத்தில் விருப்பமுள்ளவர்களும், அவ்வாத நோய்க்குத் தொக்கடம் சிறப்புள்ளது மென்றுணர்க.

தொக்கடம் தயிலத்துடனும், தயிலமில்லாமனும் செய்யலாமென்பது தேரர்கொள்கை.

வாயுவுடம் பினர் மர்த்தனத்தில் விருப்பமுள்ளவர் என்பதை;

" அங்கமர்த்தனமிசை அற்புதக்களிப்பும்"

என்ற தாலும்;

வாதநோய்க்குத் தொக்கடம் சிறப்பென்பதை;

"மர்த்தன மாகிய தொக்கடத்தின் செயல் வகுப்பேனே -
சதா-நித்தமும் வாதம் பிணித்த பிணிப்பைச் செகுப்
[பேனே"

என்றதாலும்;

தயிலத்துடனும், தயில மின்றியும் செய்வர் என்றதை;

"தயிலத்தைக் கொண்டுமெல் லாமலுஞ் செய்வர் தரமாக-
இரு-செயலுக்கு முன்சொன்ன வொன்பதுமே தொ
[ழில் நீ தேக"

என்றதாலு முணர்க. ச.

பித்தம் நாற்பதிற் சிலவற்றின் பேரும், மருந்தும்

செய்யதோ ரெண்ணஞ் சாகச்
சிறந்திடும் பித்தங் கேளாய்
அய்யமாஞ் சித்தப் பிரமை
அறிவிலாப் பிரமை சுற்றும்
நையவே நடுக்கல் வாந்தி
நலற்றிடு சுழற்றல் வாய் நீர்
தையலே யிவைக ளுக்குச்
சாற்றிட மருந்து கேளே.

(க - ரை) இவ்விருத்தம் பித்தப் பிணிகளின் பேர்களும் அவைகட்கு மருந்து சொல்லுகிறேனென்பதையும் சொல்லுகின்றது.

(போ - ரை) நாற்பது வகையான பித்தங் களாகிய அவற்றில் சில ஐயபித்தம், சித்தப்பிரமை, அறிவில்லாத பிரமை, தலை சுற்றல், நடுக்கல், வாந்தி பண்ணல், நன்மை யின்றிச்சுழற்றல் வாயில் தண்ணீர் சுரத்தல் ஆகிய இவைகளுக்குப் பெண்ணே! மருந்து சொல்லக்கேள்.

அய்யமாம் என்றது சிலேத்மபித்தத்தை, சித்தப்பிரமை என்றது உன்மாத பித்தம், அறிவிலாப் பிரமை என்றது மந்த பித்தம், நடுக்கல் என்றது நடுக்குப் பித்தம், வாந்தி என்றது சர்த்தி பித்தம், வாய்நீர் என்றது அசிரணபித்தம் என அறிக.

பித்தம் நாற்பதின் குணங்களை முடிந்த நூலிற் கண்டு கொள்க.

இப்பித்தம் நாற்பதையும் தமிழ்ப் பேராகப் பண்டைய மருந்து நூலில்,

"எங்கல் ஞானம் எழுந்திசை பாடல்"

என்னும் முதற்குறிப்பகவலாலுணர்க. ரு.

அதிமதுராதிப்பொடி

சாற்றிய மதுரங் கோட்டம்
தளருமஞ் சிட்டி யேலம் *
போற்றிய நெல்லி மாஞ்சில்
பூரஞ் † சந்த னங்கி ராம்பு
மாற்றிய தாளி சந்தான்
மருவுசீ ரகமு நாகம்
பாற்றுசர்க் கரையுங் கூட்டிப்
பரிந்துமண் டலந்தான் கொள்ளே.

(க - ரை) இவ்விருத்தம் பித்தம் நாற்பதுக்கும், அதிமதுராதிப்பொடி செய்யும் வழியைக் கூறுகின்றது.

(போ - ரை) அதிமதுரம், உயர்ந்த (சாதி) கோஷ்டம், மஞ்சிட்டி, ஏலரிசி, நெல்லிமுள்ளி, சடாமாஞ்சில், பச்சைக்கர்ப்பூரம், உயர்ந்த சந்தனத்தூள், மொட்டெடுத்த இலவங்கம், தாளிசபத்திரி, சீரகம், சிறுநாகப்பூ இவைகளை யெல்லாம் ஒரு எடையாக எடுத்து இடித்து வடிகட்டின தூளுக்குச் சரி எடை வெண் சர்க்கரை சேர்த்துத் தக்க அளவாகக் காலை மாலை இருவேளையுமாக நாற்பது நாள் உண்ணுவாய்.

(பா - ம்) * தளர்திரி கடுகுமூலம். † புகழ்

இதற்கு இது போன்ற மருந்துகள் பலவுள; அவற்றில் ஒன்றுக;

'பஞ்ச தாரை நாற்கழஞ்சு பருத்த மதுர முக்கழஞ்
சிஞ்சி திப்பிலியிருகழஞ் சேலஞ் சீரமொருகழஞ்
சஞ்சுங் கூட்டிப் பொடிபண்ணியாவின் பாலிற் கொள்வீரேல்
மிஞ்சும் பித்தந்தலை நோயும் வெள்ளோக்காளமுள்ள வெல்லாம்
அஞ்சிப் பயந்து நடுநடுங்கி அடவிக்கோடிப் போய்விடுமே'

என்னும் இதனைச் செய்தாடி நற்பயன் காண்கின்றனர். சா.

குளிதயிலம்

பரிந்து நல்லெண்ணெய் பாலும்
பருத்தநெல் லிக்காய்ச் சாறும்
திருந்திய முசுமு சுக்கை
சிந்திலும் பொன்னாங் காணி
வருந்திய முத்தஞ் சிட்டி *
மதுரமோ டேல மாஞ்சில்
பொருந்துசண் பகப்பூ கிராம்பு †
புனைந்தெரி தலைக்கு வாரே.

(க-ரை) இவ்விருத்தம் பித்தம் 40-க்கும் குளி தயிலம் செய்யும் வழி கூறுகின்றது.

(போ-ரை) நல்லெண்ணெய், பசுவின்பால், பருத்த நெல்லிக்காய்ச்சாறு, முசுமுசுக்கைச்சாறு, சிந்தில் கொடிச்சாறு, பொன்னாங்கண்ணிச்சாறு, இவைகள் வகைக்குக் கால்படி சாறாக ஒரு வீசை நல்லெண்ணெயிற் சேர்த்துக் கோரைக்கிழங்கு, மஞ்சிட்டி, அதிமது

(பா-ம்.) * சந்தம். † வங்கம்.

ரம், ஏலரிசி, சடாமாஞ்சில், சண்பகப்பூ, இலவங்கம் இவைகள் தனித்தனி கால் பலமாக எடுத்திடித்துப் பசுவின்பால் விட்டரைத்து எண்ணெயிற் கலந்து பக்குவமாகக் காய்ச்சி வடித்து நான்கு நாள்களுக் கொருமுறை தேய்த்துத் தனி வெந்நீரிற் குளிக்க வேண்டும். அப்படிச் செய்தால் மேற் சொன்ன பித்தப் பிணிகள் நீங்கிப்போகும்.

பத்தியம் முதலியவை வழக்கத்திற் கண்டு கொள்க.

இன்னும் கீழ்வாய் நெல்லித் தயிலம் முதலியவற்றையும் கொள்க. எ.

சிலேத்துமம் இருபதிற் சிலவற்றின் பேரும், மருந்தும்

வார்பெறு தனத்தா யையம்
வளர்ந்திடு மிருபதாகப்
பேர்பெறு சுவாச காசம்
பெருவிரு மலுமிரத்தம்
சீர்பெறு மாந்தை யீளை
திகைத்திடு கயரோகங்கள் *
தார்பெறு சுரமுமுண்டாம்
தனக்கெலா மருந்து கேளே.

(க-ரை) இவ்விருத்தம் சிலேத்துமப் பிணிகளின் பேர்களும், அவற்றிற்கு மருந்து சொல்லுகிறேன் என்பதும் சொல்லுகின்றது.

(பா-ம்). * விக்கல் சத்தி

(போ - ரை) கச்சினால் இறுக்கப்பெற்ற கொங்கைகளையுடைய பெண்ணே! ஐயப்பிணியானது இருபது வகைப்படும். அவற்றில் சேர்த்திபெற்ற சுவாச காசம், இளைப்பிருமல், இரத்த காசம், உளைமாந்தை, ஈளை, மருட்டுகின்ற கயரோகங்கள், இவைகளுடன் சேர்ந்த சுரம், ஆகிய இவைகள் தீர்வதற்கு மருந்து சொல்லுகிறேன் அவற்றைக் கேட்பாயாக.

ஐயநோய் இருபதில் சில நோய்களை மாத்திரம் இச்செய்யுளிற் கூறினும், எஞ்சியவைகளும் உடன் கொள்ளப்படும்.

ஐயம்மேலிடின் சுவாசம், இரத்தம், கபம், இளைத்தல், இருமல் இவை உண்டாமென்பார், இங்ஙனங் கூறினர். இதனை;

"விடங்கிய ஐயங்கேள் மேலிரைப் பேற்றிடும்
அடங்கிச் சுரங்காயும் அளவற்ற கோழைநீர்
தடங்கி யிருமிடுந் தனிவிலா விரண்டு நோம்
இடங்கியுடல்வற்றி யிரத்தமுங் கக்குமே"

எனத்திருமூலரும்,

"ஆயிர நயனன் மெய்யானையினிறமே
ஆஅமிருமலு முளைவு மசதியும்
ஆஅதாளி வாயுளறல் வேதாள நோய்
ஆயாசமேற் சுவாச மீதாகம்
ஆரூத சுரஞ்சளி மாரூத சந்நி
ஆவிவாய்ப் பானகம் ஆவியோய்வேபோன்
ஆர்க்குவதப்பிசின் ஆர்க்குவதப்பிசின்
ஆர்கலித்தரங்கையார்கலித்தரங்கை"

எனத் தேரரும்,

"உற்பவித்த கபமீளை காசரோகம்
உற்றிடிலோ சிலேத்மமதுமீறிக்காணும்'
என அகத்தியரும் கூறியவற்றானுணர்க. அ.

ஐயம் இருபதுக்கும் இஞ்சிநெய்

தனது நல்லிஞ்சிச் சாறு
தருதிரி கடுகோ டேலம்
மனமுறு தேக்கு சிங்கி *
வாலுழு வரிசி யிந்து
கனசிறு நாகங் கண்டக்
கத்தரி யரத்தை யோடு
நினைவுறு சிலேஷ்மம் போகும்
நெய்யெரித் துள்ளிற் கொள்ளே.

(க - ரை) இவ்விருத்தம் ஐயம் இருபதுந்தீர இஞ்சிநெய் செய்யும் வழிகூறுகின்றது.

(போ - ரை) இஞ்சிச்சாற்றில், தோல் சீவின சுக்கு, கெட்டிமிளகு, சிறுதிப்பிலி, ஏலரிசி, கண்டு பாரங்கி, கடுக்காய்ப்பூ வாலுழுவை யரிசி, இந்துப்பு, சிறுநாகப்பூ, கண்டங்கத்தரி, சன்னராஷ்டகம் (சிற்றரத்தை) ஆகிய இப்பதினொரு சரக்குகளையும் ஒரு அளவாக எடுத்து இடித்து வடிகட்டி இஞ்சிச்சாற்றால் அரைத்து எல்லாவற்றையும் பசு நெய்யிற் கலந்து வழக்கத்திற் கண்ட அளவுபடி குடித்தால் சிலேஷ்ம நோய் இருபதும் நீங்கும்.

இஞ்சிச்சாறு கால்படியும், நெய்கால்படியும், சரக்குகள் வகைக்குக் கால் பலமுமாகக் கொள்க.

(பா - ம்) *கோட்ட மாஞ்சில்

இந்த நெய்யைத் துணை மருந்தா (அநுபானமா) கக் கொள்ளின், இந்நோய்களுக்குப் பவழபற்பம், முத்து பற்பம், க்ஷய குலாந்தக செந்தூரம் முதலியவற்றை முதல் மருந்துகளாகக் கொள்க.

அளவு, நாளளவு பத்தியம் முதலியவற்றை வழக் கத்திற் கண்டு கொள்க.

இஞ்சிக்கு ஐயநோய் நீங்கும் என்றதை;

"இஞ்சிக்கிழங்குக் கிருமிலைய மோக்காளம்
வஞ்சிக்குஞ் சந்நிசுரம் வன்பேதி - விஞ்சுகின்ற
சூலையறும் வாதம்போம் தூண்டாத தீபனமாம்
வேலையுறுங் கண்ணாய் விளம்பு"

என்றிருப்பதாலறிக. கூ.

ஐயம் இருபதுக்கும் இருவேலிக் குளிதயிலம்

எரித்தநல் லெண்ணெய் பாலும்
 இருவேலி விலாமிச் சோடு
தரித்திடுஞ் சீந்தில் முத்தம்
 சந்தனந் தேவ தாரம்
உரித்திடு தண்ணீர் மிட்டான்
 உயர்சிலப் பனைநன் னாரி
பருத்தமஞ் சிட்டி யோடு
 பகர்தலை தனக்கு வாரே.

(க - ரை) இவ்விருத்தம் ஐயம் இருபதுக்கும் இருவேலிக் குளி தயிலம் செய்யும் வழியைக் கூறு கின்றது.

(போ - ரை) நல்லெண்ணெய் ஒரு வீசை, பசு வின்பால் ஒரு படி, வெட்டிவேர், விலாமிச்சம்வேர்,

சீந்தில்கொடி, கோரைக்கிழங்கு, சந்தனத்தூள், தேவ தார சக்கை, தோல் உரித்ததண்ணீர் விட்டான் கிழங்கு, நிலப்பனங்கிழங்கு, நன்னாரிவேர், மஞ்சிட்டி என்னும் இப்பத்து சரக்குகளையும் ஒவ்வொன்று ஒவ் வொரு பலமாக எடுத்திடித்து மேற்படி பசுவின் பா லால் அரைத்து எண்ணெயிற் கலந்து தயிலபக்குவம் வரும் வரைக்கும் எரித்து வடிகட்டி இந்தத் தயிலத் தை நான்கு நாள்களுக்கொரு முறை தேய்த்து அரைப்பிட்டுத் தனி வெந்நீரில் குளிக்கவேண்டும்.

இதனால் ஒரு மண்டல எண்ணெயிட்டுக் கொள் ளல் என்னும் பன்னிரண்டு தடவை செய்யவேண்டும்.

இத்தயில மின்றியும், அரக்குத் தயிலம், அசு வகந்த புலா லாக்ஷாதயிலம் முதலியவும் முழுக லாம். ய.

மூலம் ஒன்பதுக்கும் பேரும், மருந்தும்

தனக்குறு மிரத்த [1] மூலம்
    தாங்குமு[2]ள் மூலஞ் சீயு[3]ம்
சினக்குறு முளை[4]யா மூலம்
    தீம[5]லக் கமல [6] மூலம்
மனக்குறு வா[7]த பித்[8]த
    வளரை[9]ய மூல மாகும்
கனக்குறு மருந்து சொல்லக்
    கன்னியே கேட்டி டாயே.

(க - ரை) இவ்விருத்தம் மூலநோயின் தொகை யும், அதற்கு மருந்து சொல்வேன் என்றுங் கூறுகின் றது.

(போ - ரை.) பெண்ணே! 1 இரத்தமூலம், 2 உள் மூலம், 3 சீ மூலம், 4 முளை மூலம், 5 வரள் மூலம், 6 கமல மூலம், 7 வாதமூலம், 8 பித்த மூலம், 9 ஐய மூலம் என ஒன்பதுவகை மூலங்களாகும். இவைகளுக்கு மருந்து சொல்லக் கேட்பாயாக.

இந்த மூலரோகங்களை ஜீவரட்சாமிர்தம் என்னுநூல் ஒரு விதமாகவும், யூகிமுனிவர் சிந்தாமணி 800 என்னுநூல் இருபத்தொன்றென்றுஞ் சொல்லுகின்றது. இவற்றின் மாறுதல்களை அவற்றில் கண்டு கொள்க. (௰௧.)

மூலங்களுக்குக் கன்னிச்சருகுப்பொடி

கன்னியின் சருகு முத்தம்
　　கருணையு மெருகுஞ் சுக்கும்
வன்னியாஞ் சித்திர மூலம்
　　மருள்கிழங் கொடுகடுக்காய்
பன்னிய பிரண்டை கொன்றை
　　பகர்புளி நறலை காட்டில்
துன்னிய கருணை பாலிற்
　　சூரணஞ் செய்து கொள்ளே.

(க-ரை) இவ்விருத்தம் மூலங்களுக்குக் கன்னிச் சருகுப் பொடிசெய்யும் வழியைக் கூறுகின்றது.

(போ - ரை) உலர்ந்த கற்றாழை மடல், கோரைக் கிழங்கு, கருணைக்கிழங்கு, மெருகங்கிழங்கு, தோல் சீவினசுக்கு, சித்திரமூலவேர்ப்பட்டை, மருள்கிழங்கு, கடுக்காய்த்தோல், பிரண்டை, கொன்றைப்பட்டை, புளிங்கருணை, காட்டுக் கருணைக்கிழங்கு ஆகிய பன்

னிரண்டு சரக்குகளையும் ஒரு எடையாக எடுத்திடித்து வடிகட்டிப் பிட்டவித்து உலர்த்தி வெருகடியளவு பசுவின்பாலிற் கொண்டால் போதுமானது.

நாளளவு, பத்தியம் முதலியவைகள் வழக்கத்திற்கண்டு கொள்க. ௰உ.

கிராணிபேரும், மருந்தும்,

செய்திடு வாத பித்த
சேத்துமக் கிராணி மூலம்
கொய்திடு கிராணி வாயு
கூட்டிய சங்க்ரக கிராணி
நைதிடு மேக கிராணி
நலித்திடு சீக்கிராணி
எய்திடு கிராணிக் கெல்லாம்
இனியநன் மருந்து கேளே.

(க - ரை) இவ்விருத்தம் கிராணிகளின் பேர் முதலியவைகளையும் அதற்கு மருந்துவகை சொல்லுகிறேன் என்பதையும் கூறுகின்றது.

(போ - ரை) வாதக்கிராணி, பித்தக்கிராணி, சிலேத்துமக்கிராணி, மூலக்கிராணி, வாயுகிராணி, சங்க்ரககிராணி, மேககிராணி, வருத்துகின்ற சீக்கிராணி, முதல் உண்டாகும் எவ்வித கிராணிக்கும் இனியவைகளாகிய மருந்துகள் சொல்லக் கேட்பாயாக.

இந்நோய்களின் விளக்கங்களை முடிந்தநூலிற் கண்டு கொள்க. ௰ங.

கிராணிகளுக்கு உடும்பாதிப்பொடி

இனியதோ ருடும்பு காயம்
இந்துப்பு வளைய லுப்பு
கனிய வெள்ளுள்ளி சுக்கு
கடியதிப் பிலிம ரீசம்
தனியது சவுட்டு மண்ணும்
தழற் சித்ர மூல மோமம்
பனியது பிரமிச் சாற்றிற்
பணவெடை பொடி*யுங்கொள்ளே.

(சு - ரை) இவ்விருத்தம் மூலங்களுக்கு உடும்பாதிப்பொடி செய்யும் வழி கூறுகின்றது.

(போ - ரை) உடும்பு, பெருங்காயம், இந்துப்பு, வளையலுப்பு, வெள்ளைப்பூண்டு, தோல் சீவினசுக்கு, சிறு திப்பிலி, மிளகு, சவர்க்காரம், சித்திரமூல வேர்ப்பட்டை, ஓமம், இப்பதினொருசரக்குகளையும் பிரமிச் சாற்றால் அரைத்து உலர்த்தி வேளைக்குப் பணவெடை அளவு உள்ளுக்குக்கொண்டால் முன்சொன்ன கிராணிகள் தீரும்.

நாளளவு, பத்தியம் முதலியவை வழக்கத்திற் கண்டு கொள்க. ௰௪.

குன்மப் பேரும் மருந்தும்

பண்ணிய வாதம் பித்தம்
பகரைய குன்ம மெல்லாம்
நண்ணிய சத்தி குன்மம்
நலித்திடு வாய்நீர்க் குன்மம்

(பா - ம்) *பண்ணிய மருந்து

கண்ணிய வெரியுங் குன்மம்
சனத்திடு புரட்டு *குன்மம்
குண்ணியே வலித்த பொல்லாக்
குன்மம்போம் கூறு வோமே †.

(க - ரை) இவ்விருத்தம் குன்மப் பிணிகளையும் அவற்றிற்கு மருந்து சொல்வேன் என்பதையுஞ் சொல்லுகின்றது.

(போ - ரை) வாதகுன்மம், பித்தகுன்மம், ஐயகுன்மம், சத்திகுன்மம், வாய்நீர்க்குன்மம், எரிகுன்மம், புரட்டுகுன்மம், வலிகுன்மம் என்னும் இக் குன்மங்கள் போம் வழியைக் கூறுவோம்.

இந்நோய் விவரங்களை முடிந்த நூலிற் கண்டு கொள்க. ௰௫.

குன்மங்களுக்கு நாபியாதிப் பொடி

கூறிய நாபி சூதம்
கொடிய வெங்காரந் தாரம்‡
தேறிய விருத்§விலிங்கம்
திகழ்மனோ சிலையக் காரம்
காறிய கந்த கந்தான்
கன திரி கடுகு கூட்டி
ஆறிய பொடிய தாக்கி
அதனிற்றே னருந்து வாயே.

(க - ரை) இவ்விருத்தம் குன்மங்களுக்கு நாபியாதிப்பொடி செய்யும் வழிகூறுகின்றது.

(பா - ம்) *சந்நி. †குன்மந்தீரக் - கூறக்கேள் மருந்து தானே. ‡கொடியதோர் வெண்பாஷாணம். §வீரம்.

(போ - ரை) சுத்தி செய்தநாபி சுத்திசெய்த இரசம், வெங்காரம், தாளகம், இருவி, இலிங்கம், மனோசிலை, அக்கராகாரம், சுத்திசெய்த கந்தகம், தோல் சீவின சுக்கு, மிளகு, சிறுதிப்பிலி, இவைகளை யெல்லாம் ஒரு அளவாக எடுத்து அரைத்துப் பொடி பண்ணி, அதில் (இரண்டு குன்றி அளவு) தேனில் இழைத்துச் சாப்பிடுவாய். அப்படி சாப்பிட்டால் குன்மங்கள் போய்விடும்.

நாளளவு, பத்தியம் முதலியவை வழக்கத்திற் கண்டு கொள்க. ௰சு.

நீரிழிவு பேரும் மருந்தும்

அருந்திய வாதம் பித்தம்
ஐயமோ டிருப தாகும்
வருந்திய வாதம் நாலும்
வளர்சலம் பித்த மாறும்
பொருந்திய வையம் பத்தும்
போகுமே யிவைக ளெல்லாம்
திருந்திய வாத பித்த
சேத்துமந் தீர லாமே.

(க—ரை) இவ்விருத்தம் நீரிழிவு நோயின் விவரங் களையும் அது தீரும் என்பதையுஞ் சொல்லுகின்றது.

(போ - ரை) நீரிழிவு நோயானது வாதத்தில் நான்கும், பித்தத்தில் ஆறும், ஐயத்தில் பத்தும் ஆக இருபதாம். இவைகளும் இதில் வாதபித்த, சேத்தும கலப்பு நீரிழிவுகளும் போய் விடலாகும்.

தேரர் நீருக்கு நீர்ப்பெருக்கல் நீரருக்கல்

என்னும் இருகுணங்கள் உளவென்று பொதுவாகச் சொல்லியுள்ளார்.

அவற்றை,

பொது

நீரிருவினைக் குணத்தை நீயறி விரித்துச் சொல்வாம்
நீரினைப் பெருக்கலொன்று நீரினை யருக்கலொன்று
நீரிழிவுடனே கொல்லும் நீர்க்கட்டு வினைகளென்று
நீணில முரைக்கு மிந்த நீர்நிரைக் குணத்தைக் கேளாய்,

நீரிழிவு

நீரினைப் பெருக்கலென்னு நீரிழிவிலக்கணங்கேள்
நீலவாரிதிபோற் குக்கி நீட்டிக்கு முரைதள்ளாடும்
நீவிகூடாது கைகால் நீலமாவினை நேராகும்
நீஞ்சொணுவுரனின் மூச்சு நீசமாமயக்கங் காட்டும்.

நீரருக்கல்

நீரினையருக்கலென்னு நீர்க்கட்டின் குணத்தைக் கேட்டி
நீதமில்லாமற் கோச நீர்ப்புழை நெருப்புப் போலாம்
நீபஞயுதத்தாற்பட்ட நீலவம்பரமாங்குக்கி
நீறணீ கடவுளுண்ணு நீர்க்கட்டுப் பிணியோருள்ளே
நீவிநாவயமிராமல் நீக்கமாம் வீக்கமாமெய்
நீற்றறைபோலாமூக்கு நீரறும் வழியுமம்மா

மருந்து

நீதியுமிதற்குத்தீர்வு நீர்க்கடம்பொடுகெற்றூழை
நீவிர்முக்கடுகுமுன்பின் நீக்கிமத்திமையொன்றே கொள்
நீரறுகுடி நீராக்கி நீர்மையின் முன்பின்னே கொள்
நீக்கமாமிரண்டு நோயு நீணிலமிஃது தானே.

என்னும் அகவற்றூழிசையாலறிக. ஹ்ள.

நீரிழிவிற்கு ஆவாரையாதிக் குடிநீர்

ஆமிது மருந்தா வாரை
　　யலேகடல் முத்தங் கோஷ்டம்
தாமிது மருது நாவல்
　　தருகொட்டைக் கரந்தை பூலா
வாமிது விலந்தைக் கொட்டை
　　மல்லிகை நல்வி ளாவும்
போமிது கொன்றை பாதிரி
　　புகழுறு மதுரங் கூட்டே.

(க - ளை) இவ்விருத்தம் நீரிழிவிற்கு ஆவாரை யாதிக் குடிநீர் செய்யும் வழியைக் கூறுகின்றது.

(போ - ரை) ஆவாரம் பட்டை, கடலழிஞ்சிற் பட்டை, கோரைக்கிழங்கு, உயர்ந்த (சாதி) கோஷ்டம், மருதம்பட்டை, நாவற்பட்டை, கொட்டைக் கரந்தை, புல்லாந்தி, இலந்தைக் கொட்டை, மல்லிகை, உயர்ந்த விளாம்பட்டை கொன்றைப்பட்டை, பாதிரிப்பட்டை, அதிமதுரம் இவைகளே ஒரு நிறையாக எடுத்திடித்து அளவுப்படி நீர்விட்டுக்குடி நீர் காய்ச்சி 10, 20, 30, 40, நாள் என்னும் விதிப்படி குடித்தால் நீரிழிவுநோய் நீங்கும்.

இதுவன்றி,

"ஆவிரை கொன்றை நாவ லலேகடல் முத்தங் கோஷ்டம்"

என்னும் குடிநீரும் உண்டு என்று சொல்வர்.

இந்நோய்க்குத் தனி அப்பிரக செந்தூரம், சொர்ணப்ரக செந்தூரம், வங்க செந்தூரம், பவழ

வங்க செந்தூரம் என்னும் மருந்துகளை ஆள்வர் மருத்துநூலறிஞர். ௰அ.

அதிமதுர குளிதயிலம்

மதுரஞ்சந் தனங்கி ராம்பு
மகிழ்ந்த பச்சைக் கர்ப்பூரம்
சதிர்பெறு மேலம் நாகம்
தாளிச மாஞ்சில் மஞ்சள்
கதிர்விலா மிச்சஞ் சீந்தில்
கனமுத்தம் வேலி சட்டம்
எதிரிலா வெண்ணெய் பாலும்
எரித்து நீ மூழ்கிடாயே.

(க - ரை) இவ்விருத்தம் அதிமதிராதி குளி தயிலம் செய்யும் வழி கூறுகின்றது.

(போ - ரை) அதிமதுரம், சந்தனம், இலவங்கம், ஏலரிசி, சிறுநாகப்பூ, தாளிசபத்திரி, சடாமாஞ்சில், மஞ்சள், விலாமிச்சம்வேர், சீந்தில் கொடி, கோரைக் கிழங்கு, வெட்டிவேர், புனுகு சட்டம், பச்சைக் கர்ப்பூரம், இவைகளை வகைக்குக் கால் பலமாக எடுத் திடித்துப் பசுவின் பாலிலரைத்து நல்லெண்ணெய் ஒருவீசை, பசுவின் பால் ஒருபடி இவற்றை ஒருமண் சட்டியில் ஊற்றி அதில் முன்னர் அரைத்த மருந்துகளைக் கரைத்துத் தயில பக்குவத்திலெரித்து வடித்து முழுகுவாய்.

தயிலம் முழுக வேண்டியது நான்கு நாள்களுக்கு ஒரு முறையாதலால் அப்படியே முழுகவேண்டும். இதனை,

வீறுசதுர் நாட்கொருக்கால்
நெய் முழுக்கைத் தவிரோம்''

என்பதாலறிக. ௰௯,

மேகம் இருபது.

எரித்திடு மிரத்த மேகம்
இசைந்தசீ மேகந் தண்டில்
மரித்திடு மேகப் புண்ணுய்
வருத்திடு கிரிச்சம் பாளை
தரித்திடு துள்ளி மேகம்
சலக்கட்டு மேகம் பொல்லா
விரித்திடு மேகந் தீர
விளம்பக்கேள் மருந்துதானே.

(க - ரை) இவ்விருத்தம் மேகம் இருபதில் சிலவும் அவற்றிற்கு மருந்து சொல்வே னென்பதுங் கூறுகின்றது.

(போ - ரை) எரிச்சலைச் செய்கின்ற இரத்த மேகம், பொருந்தின சீமேகம், ஆண்குறியில் மரிப்பதற்கேதுவாய் வரும்மேகப் புண்ணால் வருத்தஞ் செய்கின்ற கிரிச்சரநோய் பாளை (கிற்றுநோய்) நிலத்திலிருக்கின்ற துள்ளிமேகம், நீர்க்கட்டு மேகம், கொடியவைகளான மேலே விவரிக்கரிக்கப்பட்ட மேகநோய்கள் தீர்வதற்கு மருந்து சொல்லக்கேள்.

தான், ஏ. அசைகள். உ௰.

மேகம் இருபதுக்கும் பறங்கிப்பட்டை ரசாயனம்

விளம்பிய பறங்கிப் பட்டை
மேவுகந் தகஞ்சா திக்காய்

களம்பெறு கிராம்பு நாகம்
　　கர்ப்பூரம் சாதி பத்திரி
தளம்பெறு மசுவ கந்தி
　　தழல்கொடி வேலி*மாஞ்சில்
இளம்புசர்க் கரைநெய் கூட்டி
　　இதமுட னுட்கொள் வாயே.

(க - ரை) இவ்விருத்தம் மேகம் இருபதுக்கும் பறங்கிப் பட்டை ரசாயனம் செய்யும் வழியைக்கூறு கின்றது.

(போ - ரை) சொன்ன பறங்கிப் பட்டை, பொருந்திய நெல்லிக்காய்க் கந்தகம், சாதிக்காய், கறுத்த இலவங்கம், சிறு நாகப்பூ, பச்சைக் கர்ப்பூரம், சாதிபத்திரி, வலிய அமுக்கனுங்கிழங்கு, சித்திரமூல வேர்ப் பட்டை, சடாமாஞ்சில் இவற்றை வெய்யிலில் வைத்து உலர்த்திப் பொடியாக்கி வடிகட்டி அத்தூளில் சரி வெள்ளைச் சர்க்கரை சேர்த்து நெய்விட்டுப் பிசைந்து வைத்துக் கொண்டு நன்மையோடு உள்ளுக்குக் கொள்ளுவாய்.

மருந்தளவு முதலியவைகளை வழக்கத்திற் கண்டு கொள்க. உக.

காமாலை.

இதமுறு வாதம் பித்தம்
　　இசைந்தசேத் துமகா மாலை
பதமுறு மழற்கா மாலை
　　பாண்டு வீங்கிய காமாலை

(பா-ம்)*தளர்திரி கடுகு

நிதமுறு வரட்கா மாலை
    நிறமஞ்சள் நீர்க்கா மாலை
சிதமுறு தொந்தத் தாலே
    சேர்ந்தகா மாலைதானே.

(க - ரை) இவ்விருத்தம் காமாலை நோயின்வகைகளைச் சொல்லுகின்றது.

(போ - ரை) உடற்கு இன்பம் விளைவிக்கின்ற வாத காமாலை, பித்தகாமாலை, பொருந்தின சேத்தும காமாலை அழற் காமாலை, பாண்டு காமாலை, வீங்கிய காமாலை, அழியாத வரட்காமாலை, மஞ்சணீர்க் காமாலை, கலப்புக் காமாலை முதலியவைகளாம்.

தான் ஏ, அசைகள்.

இவற்றின் குணங்களை முடிந்த நூலிற் கண்டு கொள்க. உஉ.

முக்கடு சிட்டப்பொடி

சேர்ந்தகா மாலைக் கெல்லாஞ்
    சிறந்தரப் பொடியுஞ் சிட்டம்
சார்ந்திடு கடுக்காய் நெல்லி
    தான்றிசீ ரகமிரண்டும்
போந்த வெள்ளுள்ளி காந்தம்
    புகழிந்து காயஞ் சுக்கு
ஆர்ந்ததிப் பிலிம ரீசம்
    தொகுத்துமே பதத்தா லீயே.

(க - ரை) இவ்விருத்தம் முன்சொன்ன காமாலை நோய்களுக் கெல்லாம் முக்கடு சிட்டப் பொடி (திரிகடுகாதி மண்டூரம்) செய்யும் வழி சொல்லுகின்றது.

(போ - ரை) உயர்ந்த இரும் பரப்பொடி, நாள் சென்ற இரும்புச் சிட்டம், பொருந்திய கடுக்காய்த் தோல். நெல்லிவற்றல், தான்றிக்காய்த்தோல், கருஞ் சீரகம், சீரகம், வெள்ளைப் பூண்டு, ஊசிக் காந்தம், இந்துப்பு, பெருங்காயம், தோல் சீவின சுக்கு, சிறு திப்பிலி, மிளகு இவைகளை யெல்லாம் பொடி பண்ணி வடி கட்டித் துணை மருந்துகளில் சேர்த்துக் கொடுக்க வேண்டும்.

காலவளவு, மருந்தளவு, பத்தியம் முதலியவை வழக்கத்தில் தெரிந்துகொள்க. உரு.

இரண நோய்கள்.

பதமுறு சூலைப் புண்கள்
 பகர்ந்திடு கடிவி காரம்
இதமுறு பெருவி யாதி
 யிசைந்திடுங் குட்டரோகம்
சதமுறு தேமல் மேனி
 தளருந்தா மரைகை வெள்ளை
நிதமுறு சொறி சிரங்கு
 நெகிழ்த்திடு மருந்து கேளே.

(க - ரை) இவ்விருத்தம் இரண நோய்களின் வகைகளையும் அவற்றின் மருந்து சொல்லுகிறேன் என்பதையும் சொல்லுகின்றது.

(போ - ரை) காலில் வரும் சூலைப் புண்கள், காணுக்கடி, காண்கடி இவற்றினுலுண்டாகும் விகாரங் கள், பெருநோய்கள், குறை நோய்கள், உடலின்மேல் வருந்தேமல்நோய்கள், தாமரைநோய்கள் (செம்படை

கள்) கைவெளுத்தல், சொரி, சிரங்கு முதலியவைகளை இளக்கி யோட்டுகின்ற மருந்துகள் சொல்லக் கேட்பாய்

ஏகாரம் அசை. உச.

இரணங்களுக்கு நீரெட்டிவிரை குடிதயிலமும் பூசுதயிலமும்

நிகழ்த்துநீ ரெட்டி வித்து
நேர்படுஞ் சூதம் லிங்கம்
தகர்த்தநெல் லிக்காய்க் கந்தி
தாரமுந் துருசு துத்தம்
புகர்த்தநெய் வார்த்தெ ரித்துப் *
பொருந்நாற் பதுநாள் கொள்ளத்
தகர்த்திடுஞ் சாம்பிராணித்
தயிலஞ் செய்துடம்பிற் பூசே.

(க - ரை) இவ்விருத்தம் இரணங்களுக்குநீரெட்டி விரை குடித் தயிலஞ் செய்யும் வழியையும் மேலுக்குச் சாம்பிராணித் தயிலம் பூசவேண்டு மென்பதையுஞ்சொல்லுகின்றது.

(போ - ரை) மருந்து நூலிற் சொல்லப்படுகின்ற நீரடி முத்து, சுத்தி செய்யப்படும் இரசம், இலிங்கம், தூய்மை செய்த நெல்லிக் காய்க் கந்தி, தாளகம் மயில் துத்தம், பால் துத்தம், இவ்வேழு சரக்குகளையும் வகைக்குக் கால்பலம் எடுத்துப் பத்துப்பலம் நெய்யிலிட் டெரித்து வடித்து நாற்பதுநாள் உள்ளுக்குக் கொண்டால் மேற்படி இரண நோய்களைத் தீர்

(பா- ம்.) *வார்த்தரைத்துப்.

த்து விடும். உடம்புக்கு மேல் சாம்பிராணித் தயிலஞ் செய்து பூசவேண்டும்.

ஏகாரம் ஈற்றசை. உடு.

சாம்பிராணித் தயிலம்

துலங்குகின்ற சாம்பிராணித் தயிலங் கேளாய்
சுத்தநிறம் பளிங்குபோல் கட்டி வாங்கி
இலங்குகின்ற பாக்கைப்போல் நருக்கிக் கொண்டே
யிதமான குண்டுசட்டி யடுப்பி லேற்றிக்
கலங்காமற் சட்டியிற் றண்ணீரை விட்டுக்
கசகாமற் குண்டுசட்டிக் குள்ளே வைத்து
மலங்காமற் சாம்பிராணிப் பொடியை நன்றாய்
மக்களே யதிற் கூட்டிச் சுற்றி வையே.

வைத்திடு நீ மேற்சட்டி மல்வாத்தி வைத்து
வாய்மட்டுங் கீழவே மண்சீலை செய்து
மெய்த்திடவே மெதுவாகத் தீ யெரித்து
மேற்சட்டி தண்ணீரைத் துழாவிக் காம்பால்
எய்த்திட்டுப் போகாமற் கிண்டிக் கிண்டி
இதமாகக் கடிகையொன் றெரித்துப் பின்னும்
கைத்திட்ட மாகவே தானிறக்கி வைத்துக்
கசிந்துவிழுந் தயிலமதைக் கண்டு கொள்ளே.

என்பதா லறிக. உசா.

கழுத்தின்மேல் நோய்

பூசிய கபால சூலை
பொருந்து பீநசநீர்த் தும்மல்
நாசிகா பீட ரோகம்
நாற்றமுந் தின்னுங் குட்டம்*

(பா-ம்.) *நாசியின் றினவு குட்டம்

தேசிகங் காதிற் சீயும்
சேர்ந்திடுங் கபால வாயு
காசினித் தொந்த ரோகம்
கரந்திட மருந்து கேளே.

(க - ரை) இவ்விருத்தம் கழுத்தின் மேலுள்ள கருவிகளிலுண்டாகும் நோய்களின் வகைகளையும், அவற்றிற்கு மருந்து சொல்வேன் என்பதையுங் கூறுகின்றது.

(பொ - ரை) கபாலசூலை, பொருந்தின பீநச வகைப்பட்ட நீர்த்தும்மல், நாசிகா பீடநோய், நாற்ற பீநசம், மூக்குத் தின்னும் பீநசம், காதில் சீவடித் தலையுடைய கபாலவாயு, இவைகள் கலந்த நோயும் தீர்மருந்து சொல்லுகின்றேன் கேட்பாயாக.

ஏகாரம் அசை. உஎ.

கழுத்தின் மேல் நோய்களுக்குப் பெருமருந்துப் பொடி

கரந்திடும் பெருமருந்து
கண்டங்கத் தரியுஞ் சுக்கு
சுரந்திடுஞ் செங்கத் தாரி
தோன்று சீரகமிரண்டு
பரந்திடு கடுகு ரோணி
பகர்சங்க மரத்தை கூட்டி
நிரந்தரஞ் சூர்ணந் தின்ன
நீங்குமேல் நோய்கள் தானே.

(க - ரை) இவ்விருத்தம் கழுத்தின்மேல் கருவிக

ளில் உண்டாகும் நோய்கள் தீரப்பெருமருந்துப் பொடி செய்யும் வழியைக் கூறுகின்றது.

(போ - ரை) பெருமருந்து, கண்டங்கத்திரி, தோல் சீவின சுக்கு, செங்கத்தாரிப்பட்டை, சீரகம், கருஞ்சீரகம், கடுகுரோகணி, சங்கம்பட்டை, சன்னராஷ்டம், இவைகளை ஒரே அளவாக எடுத்திடித்து வடிகட்டிச் (சர்க்கரை கலந்து) தின்றால் மேலே சொல்லப்பட்ட நோய்கள் நீங்கிப்போகும்.

மருந்தளவு, நாளளவு, பத்தியம் முதலியவற்றை வழக்கத்திலுணர்ந்து கொள்க,

தான், ஏ. அசைகள். உஅ·

கழுத்தின்மேல் நோய்களுக்குக் குளிதயிலம்

நீங்குகார்த் திகைக் கிழங்கு
நிலக்குமிழ் தசமூலந்தான்
பாங்குறு மஞ்சள் மூன்று
பகர்குப்பி கடுகு ரோணி
தேங்கு சாரடை யெருக்கு
சேர்கொடி வேலி சிந்தில்
பாங்குநல் லெண்ணெய் சேர்த்துப்
பருவமா யெரித்து மூழ்கே.

(க - ரை) இவ்விருத்தம் கழுத்தின்மேற் கருவிகளிலுண்டாகும் நோய்களுக்குக் குளிதயிலம் செய்யும் வழியைக் கூறுகின்றது.

(போ - ரை) கார்த்திகைக்கிழங்கு, நிலக்குமிழ் வேர், வில்வவேர், பெருங்குமிழ்வேர், நெருஞ்சில்

வேர், முன்னைவேர், சிற்றாமல்லிவேர், பேராமல்லி வேர், சிறுவழுதுணைவேர், கண்டங்கத்திரிவேர், பாதிரி, பெருவாகைகளாகிய பத்துவேர்களும், பசுமஞ்சள், கறிமஞ்சள், மரமஞ்சள், சதகுப்பி, கடுகுரோகணி, சத்திச் சாட்டரணைக்கிழங்கு, எருக்கம்வேர், சித்திரமூலவேர்ப்பட்டை, சீந்தில்கொடி இவைகள் தனித் தனிக் கால்பலம் எடுத்துத் தூள்செய்து, நல்லெண்ணெய் ஒரு வீசையில் சேர்த்துத் தயில பக்குவத்தில் காய்ச்சிவடித்து நான்கு நாட்கொருக்கால் முழுகிவர வேண்டும்.

கார்த்திகைக் கிழங்கென்பது செங்காந்தள். இது கார்த்திகைத் திங்களில் பூக்கின்றமையின் அக் கிழங்குக்குக் கார்த்திகைக் கிழங்கென்று பேர் வந்தது. இதுவே கலப்பைக் கிழங்குச் செடியென்றுணர்க. இதையே கோடல் எனவும், கண்ணேப்பூ எனவும் தோன்றி எனவும் கூறுவர்.

இதன் வகைகளெல்லாம் பொருளிலக்கணத்திலும் அச்சாரப்பாயுள்ள நூல்களிலுங் காணலாம்.

இது கார்த்திகைத் திங்களிலும் பூக்கும் என்றதை,

"நலமிகு கார்த்திகை நாட்டவரிட்ட
தலைநாள் விளக்கிற்றகையுடையவாகிக்
குலமெலாம் பூத்தனதோன்றி சிலமொழி
தூதொடு வந்த மழை"

எனக்கார் நாற்பதிலும் காண்க.

தசமூலங்கள் இவை என்றதை;

" வில்வம் பெரியகுமிழ் மென்னெருஞ்சில் முன்னையிரு
மல்லி சிறிய வழுதுணைவேர்—நல்கண்டங்
கத்தரி புன்காலிபெருவாகையிவை வன்னோயைக்
குத்துந் தசமூலங்கூறு."

என்னும் வெண்பாவாலறிக. உசு.

கவிசை.

பருவமாங் கவிசை யோடு
பக்கவிப் புருதி கோவை
உருவமாம் பிலீக வீக்கம்
உதரத்தின் சூலை யன்றிக்
கருவதை யழிக்குங் கர்ப்பக்
கட்டிவிப் புருதி யோடு
பெருவயிறுடனே மற்ற
பெருமகோ தரமுந்தானே.

(க - ரை) இவ்விருத்தம் கவிசை வகைகளைக் கூறுகின்றது.

(போ - ரை) ஓடு விப்புருதி, பக்க விப்புருதி, நீர்க்கோவை விப்புருதி, காய்ச்சல் கட்டி, வயிற்றிற் சூலை அன்றிப் பிள்ளையை யழிக்கும் கர்ப்பவிப்புருதி, பெருவயிறு, பெருமகோதரம் என்பவைகளாம்.

தான், ஏ, அசைகள்.

இவற்றின் விரிவை யூகிமுனி சிந்தாமணி 800ல் காண்க. கூ௰.

பேய்த்துமட்டிக்காய் எண்ணெய்

பெருத்த பேய்த்தும் மட்டிக்காய்
பேய்ச்சுரை வெண்காக் கட்டான்
திருத்தமாம் லவண மைந்தும்
சேர்ந்திடு சார மைந்தும்
வருத்தமா விலிங்கு கொன்றை
வச்சிரத் தின்பால் மூலம்
கருத்துறு வசம்பு மஞ்சள்
காயம் வெள்ளுள்ளி கூட்டே.

(க - ரை) இவ்விருத்தம் பேய்த்தும் மட்டிக்காய் எண்ணெய் செய்யும் வழியைக் கூறுகின்றது.

(போ - ரை) பெரிய அளவாயுள்ள பேய்த்தும்மட்டிக்காய், பேய்ச்சுரை, வெள்ளைக்காக்கட்டான், தூய்மை செய்த அஞ்சுப்புகள், பொருந்துகின்ற ஐந்து சாரங்கள், மாவிலிங்கப் பட்டை, கொன்றைப் பட்டை, சதுரக் கள்ளிப்பால், அதன் வேர்ப் பட்டை, வசம்பு, மஞ்சள், காயம், வெள்ளைப்பூண்டு இவைகளைச் சேர்ப்பாய்.

ஐந்துப்புகளாவன:—

கரியுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, கல்லுப்பு வெடியுப்பு என்பன. இதை,

"வள்ளிய கரியுப்பிந்து
வளையுப்பு கல்லுப்போடு
தெள்ளிய வெடியுப் பைந்தே"

என நிகண்டாலறிக

ஐந்துசாரங்களாவன:—

நவாச்சாரம், சத்திசாரம், உமரிசாரம், எவாச்சாரம், வடசாரம் என்பன. இதை,

"நவச்சாரம் சத்திசாரம்
நாட்டினி லுமிரிசாரம்
எவச்சாரம் வடசாரங்கள்
என்பவை பஞ்ச சாரம்"

என நிகண்டாலறிக. ௩௧.

(இதுவுமது)

காயநற் சிவதை போளங்
காட்டினு மணக்கின் வித்தும்
வாயரோ கணிமு ருங்கை
வள்ளிமா வவிரி சின்னி
பாயுறு கழற்சி கொத்தான்
பகரும்வே லிப்ப ருத்தி
தேய்விளக் கெண்ணெய் பாலும்
சேர்த்தெ ரித்துள்ளே கொள்ளே.

(க - ரை) இவ்விருத்தம் பேய்த்தும் மட்டிக்காய் நெய்செய்யும் வழியின் தொடர்ச்சி கூறுகின்றது.

(பொ - ரை) உயர்ந்த நரம்பெடுத்த சிவதைவேர், கரியபோளம், காட்டாமணக்கு விரை, பொருந்திய கடகரோகணி, முருங்கைப் பட்டை, வள்ளிக்கிழங்கு, வளமான அவிரி, சிறுசின்னி, கழற்சிப் பட்டை, கொத்தான் கொடி, சொல்லுகின்ற உத்தாமணிவேர் ஆகிய இச்சரக்குகளை யெல்லாம் வகைக்

குக் கால்பலமாக எடுத்து இடித்து ஆமணக் கெண்ணெய் ஒரு வீசையும் சதுரக் கள்ளிப்பால் கால்படியுமாகக் கூட்டி அதில் இத்தூளைப் போட்டுக் காய்ச்சி எண்ணெய்ப் பக்குவத்தில் வடிகட்டிக் குடித்தால் மேற்சொன்ன நோய்கள் நீங்குவனவாம்.

எண்ணெயளவு, நாளளவு, பத்தியம் முதலியவை உடல்வன்மை, மென்மைகளுக்கும், நோய் வன்மை மென்மைகளுக்கும், காலத்திற்கும் தக்கவாறு மருத்துவர்கள் வழக்கத்திற் றெரிந்து வைத்துக் கொள்ளவேண்டும் என்றறிக. ௩௨.

ருத்து நோய்

சேர்த்திடு மிருத்து ரோகம்
செய்யநெஞ் சருக்கல் குன்றல்
பார்த்திடு மூர்ச்சை வாயு
பயித்திய வாயு மெய்யில்
சார்த்திடு முதர வாயு
சருவாங்க வாயு மூலம்
ஏற்றிடும் வாயுவுக் கெல்லாம்
இசைந்தநல் மருந்து கேளே.

(க - ரை) இவ்விருத்தம் ருத்து நோயின் வழிகளைக் கூறுகின்றது.

(பொ - ரை) ருத்து நோயானது, மார்பின் துளையைச் சுருக்கல், குறைத்தல், மூர்ச்சையாக்குகின்ற வாயு, பித்த வாயு, உடம்பில் சேர்த்துகின்ற உதர வாயு, (வயிற்று வலி) சர்வாங்க வாயு, (உடல் முழுவதும் வலி) மூலம், ஆகச் சொல்லப்படும், இவ்வாயுக்

களுக்கெல்லாம் பொருந்திய உயர்ந்த மருந்தொன்று சொல்லுகிறேன் கேட்பாயாக.

ஹ்ருத் வடமொழி, துளை என்று பெயர், இதுவே ஹ்ருதயம் என வந்தது. இதனையே தமரக வாயு வென்பர் தமிழர். தமரகம்-துளை. இதனைச் சித்தர் நூல் ருத்திர ரோகம் எனத் தொழில் மேலேற்றிக் கூறுகின்றது. ௫௫.

ருத் நோய்க்குச் சீரக ரசாயனம்

இசைந்தசீ ரகமி ரண்டும்
இயல்திரி கடுகு மூலம்
அசைந்தநற் சித்திர மூலம்
ஆந்திரி பலையு மிந்து
பிசைந்தவாய் விளங்கங் காயம்
பெருத்திடு சவுட்டு மண்ணும்
கசந்தரோ கணியுந் தேனும்
கலந்துண்ண நோய்கள் போமே.

(க - ரை) இவ்விருத்தம் ருத்நோய்க்குச் சீரக ரசாயனம் செய்யும் வழியைக் கூறுகின்றது.

(பொ - ரை) பொருந்தின நற்சீரகம், கருஞ்சீரகம், தூய்மை செய்த சுக்கு, மிளகு, திப்பிலி, திப்பிலிக் கட்டை, வாயு ரோகங்கள் நீங்கக் காரணமான சித் திரமூல வேர்ப்பட்டை, கடுக்காய்த் தோல், நெல்லி வற்றல், தான்றிக்காய்த் தோல், இந்துப்பு, வாய்விளங் கம், பெருங்காயம், சவர்க்காரம், கடுகு ரோகணி இவைகள் ஒரே அளவாக எடுத்திடித்துக் கட்டித்

தேனில் கலந்து சாப்பிட்டால் மேற் கண்ட ருத் நோய் போய் விடும்.

மருந்தளவு, நாளளவு முதலியவைகளை வழக் கத்தி லுணர்ந்து கொள்க. ௩௪.

இரத்தநோய்

கலந்திடு மிரத்த வாந்தி
கனரத்த ரோக நெஞ்சில்
புலர்ந்திடு மிரத்த பித்தம்
பொருந்திய கயகா சங்கள்
மலர்ந்திடும் பெரும்பாட் டோடு
வளரெலும் புருக்கி சூலை
நலிந்திடு புண்ணுந் தீர
நாரியே மருந்து கேளே.

(க – ரை) இவ்விருத்தம் இரத்தநோயின் வகை களையும் அவற்றிற்கு மருந்து சொல்லுகிறேன் என் பதையும் சொல்லுகின்றது.

(பொ - ரை) உடலிற் சேர்ந்திருக்கிற இரத்த வாந்தி உயர்ந்த இரத்த நோய் நெஞ்சில் உலர்ந்து வருகின்ற இரத்தபித்தம், அத்துடன் இயைந்த கயம், காசங்கள், மிகுதிப்பட்ட பெரும்பாடு, எலும்புருக்கி, சூலை, வருந்துதற் கேதுவான புண்ணோய் ஆகிய இவை கள் தீரப் பெண்ணே! மருந்து சொல்கிறேன். கேட்பா யாக.

இரத்த ரோகந்தவிர மற்ற நோய்கள் வெளிப் படை. ஆயினும் அவற்றை முடிந்த நூலிற் கண்டு கொள்க.

இரத்த ரோகக் குறியாவது அடிக்கடி குத்திக் குத்தி யிருமல், கோழை வெளிப்படுதல், உடம்பு இளைத்தல், வாய் வழுவழுப்போடு உலர்தல், வயிற்றிற் பசிகுறைதல், அன்றி வயிறு ஒட்டிக்கொள்ளல், நாளுக்கு நாள் கெடுதியே யடைதல் என்னும் இவைகளாம். இதனை,

"அண்டியே யிருமல் குத்தியடிக்கடி சிலேஷ்மர்தள்ளி
மண்டியே யுடலம்வற்றி வழுவழுத்துலர்ந்து வாயும்
பண்டியுஞ் சுருங்கிநாளும் பதங்கெட வருமே யானால்
உண்டில்லை யெனுமிரத்த ரோகமென்றுரைக்கலாமே"

என வியாசமருத்துவத்திலுள்ளது காண்க. ௫௫.

இரத்தநோய்க்குத் தண்ணீர்விட்டான் நெய்

நாரியே தண்ணீர் மிட்டான்
நல்லத்தி யரசால் வித்து
பாரிய பனையுஞ் சீந்தில்
பகர்முத்தஞ் சாதிக்காயும்
சீரிய கிராம்பு பத்திரி
திரவிய மைந்துங் கூட்டிக்
கூரிய நெய்யிற் செய்து
கொடுத்திட ரோகம் போமே.

(க - ரை) இவ்விருத்தம் தண்ணீர் விட்டான் கிழங்கு நெய் செய்யும் வழியையும், தீரு நோயையுங் கூறுகின்றது.

(போ - ரை) பெண்ணே! தண்ணீர் விட்டான் கிழங்கு, நாள் சென்ற அத்தி விரை, அரசம் விரை, ஆலம் விரை, முதிர்ந்த நிலப்பனங் கிழங்கு, சீந்தில்

கொடி, சொல்லப்படுகின்ற கோரைக்கிழங்கு, சாதிக்காய், சிறந்த இலவங்கம், இலவங்கப்பத்திரி, ஐவகைத்திரவியங்கள் ஆகிய இவைகளை யெல்லாம் நெய்யில் பொடி பண்ணவேண்டியதைப் பொடி பண்ணியும், அரைக்கவேண்டியதை அரைத்துப் போட்டுப் பக்குவம் வரக்காய்ச்சி மேற்கண்ட நோயுள்ளவர்களுக்குக் கொடுத்தால் மேற்படி நோய் தீரும்.

ஐவகைத் திரவியமாவன:—மிளகு, கோஷ்டம், அகில், தக்கோலம், குங்குமப்பூ என்பன.

நெய் பத்துபலஞ் சேர்த்தால் சரக்குகள் தனித்தனிக் கால் பலஞ் சேர்க்கவேண்டு மென்றறிக.

நாளளவு, மருந்தளவு, பத்தியம் முதலியவை நோயாளியின் உடல் வன்மைக்கும், நோய் வன்மை மென்மைகளுக்குந் தக்கவாறு கொள்க. ருசு.

சுரக்குடி நீர்

கொடுத்திடு சுரத்துக் கெல்லாம்
கூறிய மிச்சஞ் சீந்தில்
எடுத்தகாஞ் சோரி முத்தம்
இசை பர்ப்படாக முட்டி
மடுத்திட வேம்பு கோட்டம்
வளர்கண்டங் காரி தேக்கு
தடுத்ததிப் பிலியுஞ் சுக்கு
தன்னுடன் குடிநீர் கொள்ளே.

(க - ரை) இவ்விருத்தம் சுரநோய்க்குக் குடிநீர் செய்யும் வழி கூறுகின்றது.

(பொ - ரை) எவ்வகையான சுரத்துக்கும்

மருந்து நூலிற் சொல்லப்பட்ட விலா மிச்சம்வேர், சீந்தில் கொடி, சுரத்திற் கென்றெடுத்த சிறு காஞ் சோரி, கோரைக்கிழங்கு, பொருந்தின பர்ப்பாடகம், சிற்ரு முட்டி, எவ்வகைச் சுரத்தையும் நீக்கு நில வேம்பு, சாதி கோஷ்டம், வளர்கின்ற கண்டங்கத்தரி, கண்டுபாரங்கி, ஐயமறத்தடுத்த திப்பிலி, தோல் சீவினசுக்கு இவைகளையெல்லாம் ஒரு எடையாக எடுத்து எட்டுப் பங்கு தண்ணீர்விட்டு ஒருபங்காகக் குறையும்படி காய்ச்சி வடிகட்டி அக்குடி நீரை 3, 5, 7 நாள் அளவாகக் குடித்தால் எவ்வகையான சுரமும் தீரும். ௩௭.

சந்நிகளுக்கு நசியம்

தன்னுடன் சந்நிக் கெல்லாந்
தயங்கிய முசிறு முட்டை
மன்னுபூ நாகத் தோடு
வளர்ந்திடுங் கடுகு காயம்
சொன்ன திப் பிலிமுலைப்பால்
துலங்கிய விஞ்சிச் சாறு
முன்னமே வசம்போ டுள்ளி
மூக்கினி னசியம் பண்ணே.

(க - ரை) இவ்விருத்தம் (சந்நிகளுக்கு) முழுச் சுரத்திற்கு நசியம் செய்யும் வழியைச் சொல்லு கின்றது.

(போ - ரை) உடம்பினுடன் கலந்து வருகின்ற சந்நி வகைகளுக்கெல்லாம் முயிறுமுட்டை, பூநாகம், கடுகு, பெருங்காயம், திப்பிலி, வசம்பு, வெள்ளைப்

பூண்டு இவைகளை ஒரு எடையாக எடுத்து இடித்து ஒரு துணியில் சிறு மூட்டையாகக் கட்டி ஒரு மட்சட்டியில் இஞ்சிச்சாறும் முலைப்பாலும் ஒரு அளவாகக் கலந்துவைத்து அதில் இந்த மூட்டையை ஊர வைத்து எடுத்து அதை மேற்படிசந்நி நோயால் வருத்தப்படுகிறவன் மூக்கில் பிழிவாய். அப்படி பிழிந்தால் இரண்டு மூன்று வேளைகளில் மேற் சொல்லப்பட்ட சந்நி நோய் தீர்ந்து விடும்.

இந் நசியம்பிழி மருந்தின் வகை யென்றுணர்க.()

சுரசந்நி மாத்திரை

பண்ணிய விருவி நாபி
பகர்ரசங் கந்த கந்தான்
நண்ணிய காரங் காந்தம்
நலத்திடு தாரம் வாளம்
குண்ணிய சிலைகி ராம்பு
கூறிய மிளகு சுக்கு
எண்ணுதிப் பிலியிஞ் சிச்சாற்
றிதுசுர சந்நி போமே.

(க - ரை) இவ்விருத்தம் சுரத்திற்கும், சந்நிக்கும் சுரசந்நி மாத்திரை செய்யும் வழி கூறுகின்றது.

(போ - ரை) தூய்மை பண்ணின இருவி, நாபி சொல்லப்படுகின்ற இரசம், கந்தகம், பொரித்த வெங்காரம், தூய்மை செய்த காந்தம், நன்மையான தாளகம், வாளம், மனோசிலை, இலவங்கம், மிளகு, தோல் சீவின சுக்கு, சிறுதிப்பிலி இவைகளை ஒரு எடையாக எடுத்து இடித்து வடிகட்டிக் கல்வத்திட்டு இஞ்சிச்

சாற்ருல் நன்ருயரைத்து மிளகளவு மாத்திரை செய்தால் இதன்பேர் சுரசந்நி மாத்திரையாகும். இதைக் கொடுத்தால் சுரம், சந்நி ஆகிய நோய்கள் தீரும்.

இதைக் கையாடும் வழி இச் செய்யுளில் கூறப்படாமையில் மருத்துவர்கள் அதன்வழிகளை யெல்லாம் வழக்கத்திற் கண்டுணரக் கடவர். ரு௬.

ஐவகை வலிகட்கு நசியம்

இதுமுதல் குமர கண்டன்
　　இசைந்திடு முயல கண்டன்
மதுவுடன் குதிரை மேவும்
　　வலிப்புடன் பல்வ விப்பு
பதுமமா மவிரிச் சாறு
　　பார்வசம் புள்ளி கூட்டி
முதிரவே நசியம் பண்ண
　　மொழிந்திடி லோடிப் போமே.

(க - ரை) இவ்விருத்தம் வலிகள் ஐவகை என்பதையும் அவற்றிற்கு நசியம் பண்ணும் வழியையும் கூறுகின்றது.

(பொ - ரை) முதல் குமர கண்டன் வலியும், பொருந்தின முயல கண்டன் வலியும், குதிரை வலியும், இன்னும் பலவகை வலிகளும் வசம்பு, வெள்ளைப் பூண்டு இவைகளைச் சமமாக எடுத்திடித்து அவிரிச் சாற்றிற் சேர்த்து ஊறின நீரை நோயாளியின் மூக்கில் விட்டால் மேற்கண்ட வலிகள் தீர்ந்தோடிப் போய் விடும். ௬௰.

மேற் பூசுந் தயிலம்

ஓடிய சர்ப்பத் தோலும்
உள்ளியும் வசம்பு தாரம்
நாடிய கவுரி நாபி
நலந்திகழ் காயம் போளம்
தேடிய மஞ்சள் மூலம்
திரண்டமா விலிங்கு வாகை
சூடிய பெரும ருந்து
சொல்சிறு குறிஞ்சான் கூட்டே.

(க - ரை) இவ்விருத்தம் ஐவகை வலிகளுக்கு மேலுக்குப் பூசும் சர்ப்பத்தோல் தயிலம் செய்யும் வழியைக் கூறுகின்றது.

(போ - ரை) பாம்புரித்த தோல், வெள்ளைப் பூண்டு, வசம்பு, அரிதாரம், கவுரிப் பாஷாணம், நாபி, பெருங்காயம், கரிய போளம், மஞ்சள், திப் பிலிக் கட்டை, மாவிலிங்கப் பட்டை, வாகைப் பட்டை, பெருமருந்துப் பட்டை சிறு குறிஞ்சான் இவைகளும் ; சக.

தொடர்ச்சி

சொல்லிய வெருக்கு புன்கு
துலங்கிய முருங்கை வேரும்
மல்லிகை சதுரக் கள்ளி
மரமஞ்சள் நெறி யரிசிப்பால்
புல்லிய எண்ணெ யைந்தும்
புகலுங்குக் குடத்தி னண்டம்
கல்லிய பதம தாக்கிக்
கருத்துடன் மேலே பூசே.

(க - ரை) இவ்விருத்தம் மேற்றயிலஞ் செய்யும் வழியின் தொடர்ச்சி கூறுகின்றது.

(போ - ரை) எருக்கம் பட்டை, புங்கம்பட்டை, முருங்கை வேர், மல்லிகை, சதுரக் கள்ளிப்பட்டை, மர மஞ்சள், நெறியரிசிப் பால், இவைகளெல்லாம் தனித்தனி வகைக்குப் பலம் ஒன்ருக எடுத்துத் தூளாக்கி, எள்ளெண்ணெய், இலுப்பை எண்ணெய், ஆபணக்கின் எண்ணெய், புங்கெண்ணெய், வேப் பெண்ணெய், இவைகள் வகைக்கு வீசை ஒன்று எடுத்து இதில் அப்பொடியைச் சேர்த்துப் பத்துக் கோழி முட்டையை உடைத்து ஊற்றிப் பதமாய்க் காய்ச்சி யிறுத்து மேலுக்குப் பூசுவாய். அப்படிப் பூசினல் மேற்படி ஐவகை வலிகள் நீங்கும். சஉ.

கரப்பான் நோய்

கருத்துறு புடைக ரப்பான்
    கருங்கொள்ளிக் கரப்பான் வீங்கி
வருத்திடுங் கரப்பான் பித்த
    வாதசேத் துமக ரப்பான்
பருத்திடுஞ் செங்க ரப்பான்
    பலத்ததோ ரரிக ரப்பான்
திருத்தமாங் கரப்பா னெல்லாந்
    தீர்ந்திட மருந்து கேளே.

(க - ரை) இவ்விருத்தம் கரப்பான் வகைகளும் அவற்றிற்கு மருந்து சொல்லுகிறேன் என்பதுங் கூறுகின்றது.

(போ - ரை) மனத்தில் மிக்க துன்பத்தைத் தருகின்ற புடை கரப்பான், கருங்கொள்ளிக் கரப்பான், வீங்கி வருத்தஞ் செய்கின்ற வீக்கக் கரப்பான், பித்தக் கரப்பான், வாத கரப்பான், சேத்ம கரப்பான், செங்கரப்பான், வன்மையுள்ள அரிகரப்பான் ஆகிய திருத்தமான கரப்பான்களெல்லாந் தீர்ந்து போய் விட மருந்து சொல்கிறேன். மாணக்கனே! நீ அதைக் கேட்பாயாக. சங.

செங்கத்தாரி நெய்.

தீர்ந்திடு செங்கத் தாரி
 சேர்கரு நொச்சி கொத்தான்*
சார்ந்திடு கழற்சி புன்கு
 சங்கொடு சங்கங் குப்பி
போந்திடு கிரந்தி நாயன்
 புகழ்செருப் படியுஞ் சின்னி
கூர்ந்தவே லிப்ப ருத்தி
 கொடியவெள் ளறுகு கூட்டே.

(க - ரை) இவ்விருத்தம் செங்கத்தாரி நெய் செய்யும் வழி கூறுகின்றது.

(போ - ரை) முதிர்ந்த செங்கத்தாரி, கருநொச்சி, கொத்தான் கொடி, கழற்கொடி, புன்கம் பட்டை, நற்சங்கம் பட்டை, சங்கங் குப்பி சமூலம், கிரந்தி நாயகம், செருப்படி, சின்னி, உத்தாமணி, வெள்ளறுகு ஆகிய இவைகளும்: சச.

(பா - ம்.) *தேற்று.

தொடர்ச்சி

கூடுவேம் பாடம் பட்டை
கூறிய சிவனார் வேம்பு
தேடுறு சிவதை மூலம்
தேறிய கண்டங் காரி
போடுறு கடுக்காய் ரோணி
பூதத்தின் கரப்பான் பட்டை
வேடுறு சீரமி ரண்டும்
விளக்குநெ யெரித்துக் கொள்ளே.

(க - ரை) இவ்விருத்தம் செங்கத்தாரி நெய் செய்யும் வழியின் தொடர்ச்சி கூறுகின்றது.

(போ - ரை) முன் சொன்னவற்றுடன் வேம் பாடம் பட்டை, சிவனார் வேம்பு, சிவதை வேர், கண் டங்கத்தரி, கடுக்காய்த் தோல், கடுகுரோகணி, பூத கரப்பான் பட்டை, நல்லசீரகம், கருஞ்சீரகம் இவைக ளெல்லாம் வகைக்கு ஒரு பலமாக எடுத்திடித்து வடி கட்டி ஆமணக்கெண்ணெய் ஒரு வீசையில் போட்டுப் பக்குவமாக எரித்து (நோய் வன்மை, உடல் வன் மைக்குத் தக்கபடி) நோயாளிக்குக் கொடுத்தால் மேற் சொல்லப்பட்ட கரப்பான் நோய்கள் நீங்கும். ()

விடாரிக் குடிநீர்

கொள்ளவே விடபா கங்கள்
கூறிடப் பலவா றுண்டு
முள்ளிசு துளைநா ரத்தை
முற்றிய கொன்றை நொச்சி

கள்ளவிழ் பிரமி சின்னி
கழற்சிமா மலைநன் னாரி
தெள்ளிய கடுக்காய் சுக்கு
சேர்த்திட்டுக் குடிநீர் செய்யே.

(க - ரை) இவ்விருத்தம் விடபாக நோய்களுக்குக் குடிநீர் செய்யும் வழி கூறுகின்றது.

(போ - ரை) விடபாக நோய்களைப்பற்றிச் சொல்லவேண்டு மானால், அவற்றின் விளக்கம் பலவுள. அவற்றிற்குக் கண்டங்கத்தரி, தூதுவளை, நாரத்தை, கொன்றை, நொச்சி, பிரமி, சிறு சின்னி, கழற்சி, மலைநன்னாரி, கடுக்காய்த்தோல், சிவின சுக்கு, இவைகளை ஒன்றாய்ச் சேர்த்துக் குடிநீர் காய்ச்சி 3, 5,7 நாள் வரை நோய் வன்மை, உடல் வன்மை முதலியவற்றை உணர்ந்து கொடுத்தால் மேற்சொன்ன விடபாக நோய்கள் தீரும். சசு.

கண்டமாலை வகை

செய்யதோர் கண்ட மாலை
சேர்ந்திடும் பவுத்தி ரங்கள்
வெய்யவிப் புருதி வீக்கம்
மேவிய துடையில் வாழை
பய்யபுண் சூலை யோடு
பருத்திடும் பிளவை யெல்லாம்
துய்யதோ ரரையாப் போடு
தொடங்கிய மருந்து கேளே.

(க - ரை) இவ்விருத்தம் கண்டமாலை நோயின் வகைகளைக் கூறுகின்றது.

(போ - ரை) வன்மையான கண்டமாலை, பவுத்திரங்கள், விப்புருதி, வீக்கம், தொடை வாழை, மெலிய புண், சூலை, பருத்த பிளவை, அரையாப்பு ஆகிய இவைகளுக்கு மருந்து சொல்கிறேன். மாணாக்கனாகிய நீ அவற்றைக் கேட்பாயாக. சஎ.

கண்டமாலை வகைக்குப் பூச்சு

தொடங்கிய வெருக்கு நீலி
தோன்று கார்த்திகைக் கிழங்கு
மடங்கிய குன்றி யெட்டி
வளர்பெரு மருந்து கஞ்சா
முடங்கிய வசம்பு காயம்
முதிர்வெள்ளை யுள்ளி கூட்டி
அடங்கவீக் கத்திற் பூச
அடங்கிவா யுடைந்து போமே.

(க - ரை) இவ்விருத்தம் கண்டமாலை வகைக்குப் பூசு மருந்து செய்யும் வழி கூறுகின்றது.

(போ - ரை) எருக்கு, அவிரி, கார்த்திகைக் கிழங்கு, குன்றி, எட்டி, பெருமருந்து, கஞ்சா, வசம்பு, பெருங்காயம், வெள்ளைப் பூண்டு இவைகளை யெல்லாம் சரி எடை எடுத்துச் சேர்த்தரைத்து வீக்கத்தின் மேல் பூசினால் அவ்வீக்கம் அடங்கி வாய் உடைந்து போகும். சஅ.

தயிலம்

உடைந்தவேப் பெண்ணெ யுள்ளி
யோங்குவேம் பாடம் பட்டை

கடைந்தநற் கந்தி சூதங்
காசுநற் றுருசு துத்தம்
மிடைந்தகுங் குலியந் தார
மிருதாரென் சிங்கி கூட்டி
இடைந்திடி தயிலஞ் செய்யி
லிந்தமா நோய்கள் போமே.

(க - ரை) இவ்விருத்தம் மேற்படி கண்டமாலை வகைகளுக்கு மேலுக்கு இரணத்தின்மேல் தடவும் தயிலம் கூறுகின்றது.

(போ - ரை) வேப்பெண்ணெய் ஒரு வீசை, வெள்ளைப்பூண்டு, வேம்பாடம் பட்டை, கந்தகம், இரசம், காய்ச்சுக்கட்டி, மயில் துத்தம், பால் துத்தம், குங்குலியம், அரிதாரம், மிருதார் சிங்கி இவைகளை வகைக்கு ஒரு பலம் சேர்த்துப் பொடித்து மேற்படி வேப்பெண்ணெயில் போட்டுப் பக்குவமாய் எரித்து வடித்துத் தடவினால் மேற்படி கண்டமாலை வகையி லுண்டான இரணங்கள் ஆறும். சகூ.

கண்ணோய்வகைகள்

இந்தமா நீல காச
மியற்றிடும் பித்த காசம்
வந்தமா படலம் பில்லம்
மயிர்க்குத்து புழுவெட் டோடு
சந்திகா மாலைக் கண்ணுந்
தருநேத்திர வாயு தானும்
நந்திசொல் வினிய மைந்தா
நயந்துரை வகையைக் கேளே.

(க - ரை) இவ்விருத்தம் கண்ணோய் வகைகளைச் சொல்லுகின்றது.

(போ - ரை) பெரிய நீலகாசம், பித்தகாசம், படலம், கண் பில்லம், மயிர்க்குத்து, புழுவெட்டு, சந்திகாமாலைக்கண், நேத்திரவாயு இவைகளை நந்தி சொல்லின்படி நான் சொல்ல, மாணாக்கனாகிய நீ நான் விரும்பிச் சொல்லும் வகையைக் கேட்பாய். ருo.

கண்ணோய்க்கு முத்தாதி மாத்திரை

உரைத்திடு முத்து வெள்ளி
யுயர்ந்ததோர் தாமிரஞ் சங்கு
கரைத்திடு துருசு துத்தம்
கைதலை யோடு பொன்னும்
திரைத்திடு பீத ரோணி
சேர்புன்கு நிம்பச் சாற்றால்
அரைத்திடு கண்ணிற் றெண்ணூற்
றுறநோ யகன்று போமே.

(க - ரை) இவ்விருத்தம் கண்ணிலுண்டாகும் நோய்களுக்கு முத்தாதி மாத்திரை செய்யும் வழி கூறுகின்றது.

(போ - ரை) சொல்லப்படுகின்ற முத்து, வெள்ளிப் பொடி, உயர்ந்ததான தாம்பிரப்பொடி, ஊதும் சங்கின் பொடி, மயில் துத்தம், பால் துத்தம், தலையோடு, பொன், பீதரோகணி, புன்கம் பருப்பு இவைகளை எலுமிச்சம் பழச்சாற்றா லரைத்திடுவாய், பின்னர் கண்ணில் போடவேண்டிய துணை மருந்து (அனு

பானத்) துடன் போட்டால் கண்களிலுண்டாகும் தொண்ணூற்ருறு நோய்களும் நீங்கிப் போய்விடும். ()

கண்ணேய்களுக்கு முழுகெண்ணெய்.

போமிது பொன்னுங் காணி
புகழ்சிறு கீரை முத்தம்
ஓமிது சீந்தில் நிம்ப
முயருஞ்சண் பகப்பூ நாகம்
ஆமிது மதுர மேலம்
அலருஞ்செங் கழுநீர் கோஷ்டம்
நாமினி சொன்னே மெண்ணெய்
நற்பதஞ் செய்து மூழ்கே.

(க - ரை) இவ்விருத்தம் கண்ணேய்களுக்கு முழுகு தயிலம் சொல்லுகின்றது.

(போ - ரை) பொன்னுங்காணி, சிறு கீரை, கோரைக்கிழங்கு, சீந்தில் கொடி, எலுமிச்சை சண் பகப்பூ, சிறு நாகப்பூ, அதிமதுரம், ஏலரிசி, செங்கழு நீர்க் கிழங்கு, கோஷ்டம், இவைகளை ஒவ்வொரு பலம் எடுத்திடித்துப் பொடித்து ஒரு வீசை நல்லெண் ணெயிற் சேர்த்துப் பக்குவமாய்க் காய்ச்சி மூழ்கு வாய். அப்படி முழுகினல் கண்ணிலுண்டாகும் நோய்கள் யாவும் நீங்கும். ருஉ.

எல்லா மருந்துக்கும் விஞ்சை மூலம்

செய்திடு மருந்துக் கெல்லாம்
சிறந்ததோர் விஞ்சை மூலம்
செய்திடு பரிகா ரந்தான்
சித்தியாஞ் சகல மெல்லாம்

செய்திடுஞ் சூக்ஷா சூக்ஷம்
　　தேகம் பொன் னிறமதாகும்
செய்திடு வாதத் திற்குச்
　　செப்புவே ளுதி யாமே.

(க - ரை) இவ்விருத்தம் எல்லா மருந்துக்கும் விஞ்சை மூலம் செய்கிறது சொல்லுவதாகக் கூறு கிறது.

(போ - ரை) உலகத்தில் மருத்துவர்கள் செய்கிற மருந்துகளுக்கெல்லாம் சிறந்ததான ஒரு விஞ்சை மூலம் சொல்லுகிறேன். அந்தப் பரிகாரத்தால், எல்லாங் கைகூடும். இந்தச் சூட்சத்தால் தேகம் பொன்னிறமாகும். இதை வாதத்திற்குக் காரணமாகச் சொல்லுவேன். ருடு.

வாதத்திற்கு மருந்து

ஆதியாம் பூமி நாதம்
　　அதையைந்து சுத்தி செய்து
வேதியாம் பழத்தின் சாறும்
　　விட்டரைத் துலர்த்திக் கொண்டு
சாதியா மோட்டில் வைத்துத்
　　தணலிடு கோழியாக
வாதியாம் பெயரீர் கேளீர்
　　வடிந்திடு மெண்ணெய் தானே.

(க - ரை) இவ்விருத்தம் இரசவாதஞ் செய்வதற்குக் குரு மருந்து செய்யும் வழி கூறுகின்றது.

(போ - ரை) முதன்மையான பூமிநாதம் என்னும் பூ நீற்றை ஐந்துதரஞ் சுத்தி செய்து, வேதை

யாகக் கூடிய பழச்சாறென்று சொல்லப்படுகின்ற சுத்த ஜலத்தால் அரைத்துப் பில்லை தட்டி உலர்த்தி ஒரு ஓட்டிலிட்டு மூடிச் சீலை செய்துலர்த்திப் பத்தெரு விற் புடம் போட்டெடுத்தால் எண்ணெய் வடிந்திடும்.

தொடர்ச்சி

தானென்ற பூமி நாதஞ்
சகலமுங் கட்டும் பாரு
வானென்ற விந்து வொன்று
வளர்வெடி யுப்பு நான்கு
ஊனென்ற சீனம் ரண்டும்
ஒன்ருகக் கூட்டிக் கல்வம்
கானென்ற சிமிட்டுப் பாலுங்
கருவுமே விட்டிட் டாட்டே.

(க - ரை) இவ்விருத்தம் குரு மருந்து செய்யும் வழியின் தொடர்ச்சி கூறுகின்றது.

(போ - ரை) இந்தப்பூநீருனது எந்தச் சரக்கை யும் கட்டும், இத்துடன் இரசம் ஒரு எடை, வெடி யுப்பு நான் கெடை, படிகாரம் இரண்டெடை ஆகிய இவைகளை யெல்லாம் ஒன்ருகச் சேர்த்துக் கல்வத்தி லிட்டுச் சிமிட்டுப் பாலாலும் கோழி முட்டை வெண் கருவாலும் நன்ருயரைப்பாய்.

சிமிட்டுப்பால் இரசவாதிகள்பால் கேட்டறிக. ()

தொடர்ச்சி

ஆட்டியே வில்லை செய்தங்
ககலமா மோட்டில் வைத்துச்
சூட்டியே காயப்போடு
சுருக்கெனக் கணிலிட்டக்கால்

மாட்டியே குக்குடத்தில்
வலமுடனுற வாங்கிப்
பூட்டியே யெடுத்துப் பாரு
புகல்முப்புச் சுண்ணமாச்சே.

(க - ரை) இவ்விருத்தம் குரு மருந்து செய்யும் வழியின் தொடர்ச்சி கூறுகின்றது.

(போ - ரை) அரைத்துப் பில்லை செய்து ஒரு அகலமான ஓட்டில் வைத்துக் காயப்போட்டு, அந்தப் பில்லை கணீலென்று சத்தங் கேட்டால் மறு ஓடு மூடிச் சீலை செய்துலர்த்திப் பத்தெருவிற் புடம் போட்டு ஆறின பின் எடுத்துப் பார்த்தால் முப்புச் சுண்ணமாம். ருசு.

பெருமை

ஆச்சப்பால் வீரம் பூரம்
அறைந்திடுஞ் சரக்கை யெல்லாம்
மூச்சப்பா லோடொட் டாமல்
முக்யமா யடக்குஞ் சொன்னேன்
போச்சப்பா சுண்ணஞ் செய்தீர்
வளமுள்ள செந்தூ ரங்கள்
காய்ச்சப்பா நீறு மூலி
கட்டுகட் கடிதான் காணே.

(க - ரை) இவ்விருத்தம் குரு மருந்தின் பெருமை கூறுகின்றது.

(போ - ரை) அப்படி செய்து முடித்த பிறகு வீரம் பூரம் முதலாகச் சொல்லப்பட்ட சரக்குகளை யெல்லாம் இது ஓட வொட்டாமல் அடக்கும், இப்பொழுது சுண்ணஞ் செய்தீர், இது செந்தூரங்கள்,

நீறு, மூலிகைகளால் கட்டும் கட்டுகள் ஆகிய இவைகளுக்குக் காரணப் பொருளாகும். ருஎ.

நோய் நட்சத்திரத்தால் நோயாளி நன்மை தீமை யறிதல்.

அடியொன்று தலை மூன்றததுவுஞ் சாவாம்
அடுத்தவரை யோர்நான்கிலதுவுஞ் சாவாம்
படிபுகழு முடலின்வரை யெட்டி னிற்கில்
பையவே நோய்தீரும் பயமோவில்லை
கடிக்கமலக் கைகாறன் வரையினிற்கில்
கனகம்போற் றேகமுமாங் கண்டு கொள்வாய்
அடிமுதலாயிரவி நின்ற நாளிணைத் தொட்
டபிசித்தோடிருபத் தெட்டாய்ந்து கொள்ளே.

(க - ரை) நோயாளி நோயில் படுக்குங் காலத்தில் சூரியன் நின்ற நட்சத்திரத்தை முதலாவதாகக் கொண்டு உத்திராடத்துக்கும் திருவோணத்துக்கும் இடையில் அபிசித்து என்கிற நட்சத்திரத்தைச் சேர்த்து இருபத் தெட்டாக வரிசைப் படுத்தினுல் நோயாளி நோய் கொண்ட நாள் கடைசி ஒன்ருனுலும் மேலிருக்கிற மூன்றில் எதுவா யிருந்தாலும் அடுத்த நான்கு நட்சத்திரங்களில் எதுவாக விருந்தாலும் அந்நோயாளி இறந்து விடுவான். அதற்கடுத்த உடற்பங்காகிய எட்டு நட்சத்திரங்களில் எதுவாக விருந்தாலும் நோய் மெதுவாகத் தீரும். ஆனுல் பயமில்லை. கை கால்களின் பங்காகிய மற்ற பன்னிரண்டு நட்சத்திரங்களில் எதுவாக விருந்தாலும் உடல் பொன்

மயமாம். மருத்துவனுனை நீ இதைக் கண்டு கொள்வாய். ருஅ.

தாளிசபத்திரிப் பொடி

கொள்ளவே தாளிசங் கழஞ்ச தாறு
கூட்டுதிரி கடுகுகழஞ் சீரி ரண்டா
மள்ளவே யேலமில வங்கந் தானு
மாக்கவைகள் வகைவகைக்குக் கழஞ்சதைந்து
தள்ளவே யிடித்துவடி கொண்ட பின்பு
அக்குகழஞ் சீராறு சீனி கூட்டி
உள்ளன்பாய்த் தின்றுவரில் வரட்சி பித்தம்
ஓடுசலக் கடுப்பிரத்த மேகம் போமே.

(க - ரை) இவ்விருத்தம் தாளிசபத்திரிப் பொடி செய்யும் வழியைக் கூறுகின்றது.

(போ - ரை) தாளிச பத்திரி கழஞ்சு 6, தோல் சீவின சுக்கு கழஞ்சு 4; மிளகு கழஞ்சு 4; சிறுதிப்பிலி கழஞ்சு 4; ஏலம் கழஞ்சு 5; மொட்டெடுத்த இலவங்கம் கழஞ்சு 5; இவைகளை யெல்லாம் உலர்த்தி யிடித்து வடிகட்டிக் கொண்ட பிறகு வெள்ளைச் சர்க்கரை பன்னிரண்டு கழஞ்சு கூடச் சேர்த்து வைத்துக் கொண்டு காலே, மாலே, இரண்டு வேளையும் வெருகடியளவு சாப்பிட்டுக் கொண்டு வந்தால் சில நாள்களில் உடல் வரட்சி, பித்தம், நீர்க்கடுப்பு, இரத்தமேகம் ஆகிய இவைகள் தீரும். ருகூ.

தொடர்ச்சியும் ஜாதிலிங்கக் கட்டும்

மேகம்போஞ் சகலநோய் வாய்வுந் தீரும்
வேடிக்கைச் சிமிட்டுவித்தை வாதங்கேளு

பாகம்போ மெண்ணுதே கந்தி தாரம்
பகருமரப் பொடியோடு சிலையுங் கூட்டித்
தாகம்போங் கருவிட் டரைத்து வாங்கிச்
சமனுக லிங்கத்திற் கவசங் கட்டி
ஆகம்போ மெண்ணுதே குக்கு டத்தில்
அப்பனே சாதிலிங்க மடைகட்டாமே.

(க - ரை) இவ்விருத்தம் தாளிசபத்திரிப் பொடியால் தீரும் நோய்களின் தொடர்ச்சியும், சாதிலிங்கக் கட்டு செய்யும் வழியுங் கூறுகின்றது.

(போ - ரை) இப்பொடியினுல் மேகம், பல நோய்கள் வாயு முதலியவை தீரும். இனிச் சிமிட்டு வித்தை வாதத்தைக் கேட்பாயாக. அது தூய்மை செய்த நெல்லிக் காய்க் கந்தகம், தாளகம் இரும்பு அரப்பொடி மனேசிலை இந்நான்கையும் வகை ஒன்றுக்குக் கால் பலம் வீதம் எடுத்துக் கோழி முட்டையின் வெண் கருவால் அரைத்து ஒரு பலம் தூய்மை செய்த இலிங்கக் கட்டிக்குக் கவசங் கட்டி (பூசி) உலர்த்திச் சீலைமண் செய்து பத்தெரு முட்டையிற் புடம் போட்டு ஆறின பின்பு எடுத்துப் பார்த்தால் அவ்விலிங்கம் கண்ணடைந்து கெட்டிக் கட்டாகும். ()

கலிவிருத்தம்

கட்டான லிங்கங் காட்டுமுன் னேர்களை
மட்டான தனபதி வைத்திடும் வேதைகேள்
விட்டான சூடனும் வீரமுங் கூட்டிடு
தட்டான தில்லைத் தங்கம்போ லாடுமே.

(க - ரை) இக்கலி விருத்தம் முன்லிங்கத்தைப் பின்னர் செய்யும் வழி கூறுகின்றது.

(பொ - ரை) முன்னர் கட்டானலிங்கமானது இது செய்வோனது பெற்றோர்களைக் குபேரன் உலகத்தில் வைக்கும் (எனவே செல்வமுடையவர்களாவார்கள்) என்றபடியாம். ஆகையால் அப்படிப்பட்ட இலிங்கத்தால் செய்யப்படும் வேதையைக்கேள். அந்த லிங்கத்தை உருக்கி அதில் கர்ப்பூரமும் வீரமும் வகைக்கு ஒரு கழஞ்சு சேர்க்கயாதொரு தடையுமில்லாமல் தங்கம்போல் உருகியாடும். சுக.

ஆடவேகந்தி யதிலிஞ் சிச்சாறு
கூடவே விட்டுக் குழைய வரைத்திடு
வாடவே சாமம் வளர்த்த வெயில்முகம்
நாடவே யிப்படி நாள்மூன்று பாருமே.

(க - ரை) இக் கலிவிருத்தம் மேல் இலிங்கக் கட்டு வேதையின் தொடர்ச்சி கூறுகின்றது,

(பொ - ரை) அஃதிருக்கத் தூய்மையான கந்தகத்தில் இஞ்சிச் சாறு விட்டு நன்றாயரைத்துக் குழம்பாக்கி ஒரு சாமம் என்னும் மூன்று மணி நேரம் வெய்யிலில் வைக்க வேண்டும். இப்படியே மூன்று நாள் செய்யவேண்டும். சுஉ.

பாருநீ கந்தகம் பற்பம தாகச்
சேருநீ லிங்கமும் செயமான கந்தியும்
வாருநீ பீங்கானில் வளருமரிச்சாறு
மேருநீ கோழி ரத்தமுங் கூட்டிடே.